பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 14 வியாழக்கிழமை (26.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:092

# வன்னியிலிருந்து வரும் மக்களுக்கு இந்திய மருத்துவக்குழு சிகிச்சை

## மிக விரைவில் இலங்கை வந்தடையும்

கொழும்பு, பெப்ரவரி 26

முல்லைத்தீவு உட்பட்ட வன்னிப் பிரதேசத்தில் யுத்தத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டுவரப்படும் தமிழர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக விசேட மருத்துவக் குழுக்கள் இந்தியாவில் இருந்து விரைவில் வரவிருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இத்தகைய இந்திய மருத்துவக் குழுக்களின் சேவையைப் பெறுவது தொடர்பாக இந்திய - இலங்கை அரசுகள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் நேற்று மற்றொருவர் தீக்குளிப்பு



சென்னை, பெப்.26

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடனடித் தீர்வுகாண வலியுறுத்தி சிவகாசியைச் சேர்ந்த மற்றொருவர் தீக்குளித்து உயிரிழந்தார்: நேற்று நண்பகல் 12 மணியளவில் மண்ணெண்ணெய் பரலுடன் ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த ஆணை யூர் பஞ்சாயத்து அய்யம்பட்டைச் சேர்ந்த (16 ஆம் பக்கம் பார்க்க)

## அவலங்கள் ஏற்பட்ட போதிலும் மக்கள் தமது பகுதிகளிலிருந்து வெளியேற விரும்பவில்லை

### வன்னியிலிருந்து சொல்கிறார் கனகரத்தினம்



முல்லைத்தீவு,பெப்.26

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் தொடர்ந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களில் தினமும் சராசரி 30 முதல் 35 பேர் வரை கொல்லப்படுகின்றனர். அவ்வாறு மரணங்கள் ஏற்பட்ட போதிலும் அங்கு வாழும் மக்கள் வேறு இடங்களுக்கு வெளியேற விரும்ப வில்லை. தொடர்ந்தும் அங்கேயே வசிக்க விரும்புகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தங்கியிருக்கும் அவர் அங்கிருந்து பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் போன்ற பிரதேசங்களி (16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

### கனடா மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,பெப்.26

வடக்கு மோதலில் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி மீண்டும் கனடா வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கனடா சர்வதேச ஒத்துழைப்பு அமைச்சர் பெவர்லி ஜே.ஒட நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் வடக்கில் மோதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா நாட்டு அரசு மேலதிக நிதி உதவியை அளிக்கவுள்ளது. இலங்கைப் பெறுமதியின்படி 50 லட்சம் டொலர் நிதியுதவியை வழங்கவுள்ளளோம்.

இம் மாதம் பெப்ரவரி 4 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதை விட மேலதிகமாக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் மோதலில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். மீண்டும் நாங்கள் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பையும் கேட்டுக்கொள்கின்றோம். (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் அகோர ஷெல் வீச்சு! 22 பொது மக்கள் பலி; 41 பேர் படுகாயம்!!

கொழும்பு, பெப். 26

வன்னியில் நேற்று நடத்தப்பட்ட ஆட்லெறி, பல்குழல், மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் மொத்தம் 22 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 41 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவற்றில் இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகள் மீது நேற்று புதன்கிழமை அதிகாலை தொடக்கம் காலை 10 மணிவரை ஆட்லெறி, பல்குழல், மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் 22 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 41 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் உ.மகேஸ்வரி (வயது - 45), யோ.வனிதா (வயது - 21), (16 ஆம் பக்கம் பார்க்க)'

## குற்றப்புலனாய்வுப் பொலிஸார் சம்பந்தன் எம்.பியிடம் விசாரணை

கொழும்பு, பெப். 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் குற்றப்புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்றரை மணித்தியாலயங்களுக்கு மேல் நடத்தப்பட்ட இந்த விசாரணையில் குறிப்பாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அண்மையில் ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையொன்று தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மிடம் எவ்வாறான (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாக். உளவுப் பிரிவு இந்தியாவுக்குள் இலங்கை ஊடாக நுழையும் சாத்தியம்

### அமைச்சர் சிதம்பரம் தகவல்

புதுடில்லி, பெப்.26

பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. இலங்கை ஊடாக தென்னிந்தியாவுக்குள் ஊடுருவும் அபாயம் குறித்து இந்திய அரசு ஆராய்வதாகத் தெரிவித்துள்ள இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தமது அரசு எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

''இன்னமும் இது குறித்த தெளிவான தகவல் எதுவும் இல்லை. எனினும் இதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது'' என அவர் ராஜ்யசபையில் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் உளவுப் பிரிவு தென்னாசியாவின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் கடும் மோதல் தொடர்கிறது

கொழும்பு, பெப்.26

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியை இரு முனைகளில் இணைத்து சுற்றிவளைத்துள்ள படையினர் முன்னேறிவருகின்றனர் என இராணுவத் தலைமையகம் நேற்றிரவு தெரிவித்துள்ளது.

படையினரின் முன்னேற்ற முயற்சியை தடுப்பதற்கு கடும் எதிர்த்தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள போதும் படையினர் முன்னேறுகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பெரும் சுகாதார நெருக்கடி; தொற்று நோய்கள் பரவும் ஆபத்து!

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது

கொழும்பு, பெப். 26

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சுகாதார சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அங்கு தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயம் குறித்தும் அது எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனம், தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் தொடரும் மோதல்கள் காரணமாக பல ஆயிரக்கணக்கானவர்களின் உடல் நலம் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் காணப்படும் சுகாதார நிலை தொடர்பாக துரிதமான மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறும் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளை மேலும் பலப் (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே கல்விச்சுடர்
தரம் 5 மாணவருக்கான
தயார்படுத்தல் பரீட்சை
வினாத்தாள் -I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



இலங்கை வங்கியின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது. 'வடபிராந்தியத்தின் அபிவிருத்தியில் இலங்கை வங்கியின் பங்கு' என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு ஒன்றை அவர்கள் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடத்தினர். இலங்கை வங்கியின் உயர் அதிகாரிகள் குழு, உதயன் பணிமனைக்கு நேற்று மாலை விஜயம் மேற்கொண்டு தமது திட்டங்கள் குறித்து ஆசிரியர் குழுவுக்கு விவரித்தனர்.

கொழும்பில் இருந்து வந்த வங்கியின் உயர் அதிகாரிகளும் யாழ். அலுவலகங்களின் உயர் அதிகாரிகளும் அவ்வேளை, உதயனுக்கு விஜயம் செய்திருந்த யாழ். ஊடக பயிற்சி நிலையத்தின் ஆலோசகரும் சர்வதேச ஊடக வல்லுநருமான கலாநிதி ஹென்றிக் குறுநெற்றுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படங்களை மேல் வரிசையில் காணலாம்.

உத்தேச புதிய திட்டங்கள், வங்கி நடவடிக்கையின் அபிவிருத்தி மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களை வங்கி உயர் அதிகாரிகள் ஆசிரியபீடத்தினருக்கு விளக்கிய போது எடுக்கப்பட்ட படங்களை கீழ் வரிசையில் காணலாம்.

(1) பிரதிப்பொதுமுகாமையாளர்(சர்வதேசப் பிரிவு) எச்.எம்.ஏ.பி.வீரசேகரா (2) பிரதிப் பொதுமுகாமையாளர் (அபிவிருத்தி)ஸி.சமரசிங்க (3)பிரதிப்பொதுமுகாமையாளர் (மனிதவளம்) டபிள்யூ டி.எம். விமலரத்ன (4)பிரதிப்பொதுமுகாமையாளர்(சட்டத்துறை) எம்.கிரிதரன்

# மேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்றுடன் முடிவு

மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நண்பகல் 12 மணியளவில் முடிவடையும் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்று அந்தந்த தேர்தல் செயலகங்களில் தாக்கல் செய்தது. நாளை அக்கட்சி கம்பஹா மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்.

கொழும்பு மாவட்டத்தில் 12 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹா மாவட்டத்தில் 6 சுயேச்சைக் குழுக்களும், களுத்துறை மாவட்டத்தில் 3 சுயேச்சைக் குழுக்களும் நேற்று தத்தமது கட்டுப்பணங்களைச் செலுத்தின. நேற்று நண்பகலுடன் கட்டுப்பணம் செலுத்தல் முடிவடைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட பல கட்சிகள் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளன.

கடந்த 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வேட்புமனுத் தாக்கல் இன்று 12 மணியளவில் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்கார் விருது பெற்ற படத்தை பார்க்க ஒபாமாவுக்கு ஆசையாம்

வாஷிங்ரன், பெப். 26

உலகத்தை தன்பக்கம் கவர்ந்திழுக்கும் வகையில், சிறந்த படத்துக்கான ஒஸ்கார் விருதுகளை அள்ளிக் குவித்த 'ஸ்லம்டாக் மில்லினர்' திரைப்படத்தைப் பார்க்க தாம் மிகவும் ஆவலுடன் இருக்கிறார் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

''மும்பைச் சேரிப் பகுதியில் வாழும் இந்திய இளைஞரை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட 'ஸ்லம்டாக் மில்லினர்' திரைப்படம் எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றுள்ளது.

''இதில் இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹுமானுக்கு 2 ஒஸ்கார் விருதுகள் கிடைத்துள்ளன. இந்தத் திரைப்பட இயக்குநர் டேனி போயலுக்கு சிறந்த இயக்குநருக்கான ஒஸ்கார் விருதும், சிறந்த திரைக்கதைக்கான விருது சிமோன் பியுஃபோய்க்கும், சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருது அன்டனி டாட் மான்ட்டிலுக்கும் கிடைத்துள்ளன.

''இத்திரைப்படத்தைப் பார்க்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மிகவும் ஆவலுடன் இருக்கிறார்'' - என்றார்.

# ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத நாட்டவர்கள் பிரிட்டனின் விஸா கட்டுப்பாட்டினால் அதிருப்தி

லண்டன், பெப். 26

பிரிட்டன் விதித்துள்ள புதிய விஸா கட்டுப்பாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்குட்படாத நாடுகளைச் சேர்ந்தவர்கள் கடும் அதிருப்தி தெரிவி த்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து முதல் நிலை பிரிவின் கீழ் பிரித்தானியாவுக்குச் செல்வதற்கான குடியேற்ற நடை முறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் காலியாகும் பணியிடங்களில் முதலில் உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

இந்த் அறிவிப்பை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் ஜொக் ஸ்மித் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு இந்த முதல்நிலை பிரிவின் கீழ் பிரித்தானியாவுக்குச் சென்ற வெளிநாட்டவர்கள் 25 ஆயிரம் பேர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்களாவர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேராதவர்களுக்கு குறைந்த பட்ச கல்வித் தகுதி இளநிலை பட்டப்படிப்பிலிருந்து முதுநிலையாக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதியமும் 17 ஆயிரம் பவுண்டிலிருந்து 20 ஆயிரம் பவுண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டுப்பாடுகளின் மூலம் பிரித்தானியாவுக்குச் செல்லும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேராதவர்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைந்து விடும் எனத் தெரிகிறது.

# அமெரிக்க ரொக்கெட் வானில் வெடித்துச் சிதறியது!

கலிபோர்னியா, பெப். 26

அமெரிக்காவின் புதிய செயற்கைக் கோளொன்றை கொண்டுச் சென்ற ரொக்கெட், ஏவப்பட்ட சில விநாடிகளில் வெடித்துச் சிதறி, அத்திலாந்திக் கடலில் விழுந்தது.

பூமியில் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தைக் கண்டறிவதற்கும், விண்ணில் கரியமில வாயு அளவைக் கண்டுபிடிப்பதற்கும் அமெரிக்கா செயற்கைக்கோள் ஒன்றை உருவாக்கியிருந்தது.

இந்த செயற்கைக்கோள், கலிபோர்னிய விமானப்படைத் தளத்திலிருந்து தாரஸ் -எக்ஸ்.எல். என்ற ரொக்கெட் மூலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

எனினும், ஏவப்பட்ட சில விநாடிகளில் ரொக்கெட் வெடித்துச் சிதறி, அத்திலாந்திக் கடலில் விழுந்தது. ரொக்கெட்டும் கோளும் பிரியும் இடத்தில் கோளாறு ஏற்பட்டு, ரொக்கெட் வெடித்துச் சிதறிவிட்டது என காஸா விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள். இத்திட்டம் இலங்கை நாணயப்படி ரூபா 3,900 கோடி செலவில் உருவாக்கப்பட்டிருந்தது. இம் முயற்சி தோல்வி கண்டுவிட்டது.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

காபறேற்றர் ஆனந்தனின் அன்பு மனைவியின்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 09.08.1948

ஆண்டவன் அடியில்: 09.03.2008

## திருமதி ஆனந்தன் (பாலசிங்கம்) நீலா

திதி: துதியை 26.02.2009



எங்கள் குடும்ப குலவிளக்கே
அன்பின் இருப்பிடமே
அறிவின் பொக்கிசமே
பார்போற்றும் நல் உத்தமியே
எங்களை கண்ணை இமை
காப்பது போல் காத்தவரே
உங்களை கொடிய நோய்
காவு கொண்டதுவோ
எங்களை ஆதரிப்பதற்கு
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும்
அரவணைப்பிற்கும் ஈடாகுமா
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

130, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

## திருமதி இராமநாதன் இராஜேஸ்வரி



சரசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி இராமநாதன் இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (24.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அருணாசலம் இராமநாதனின் அன்பு மனைவியும் மஞ்சுளா வின் அருமைத் தாயும் இ.பிரபாகரனின் (லண்டன்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.02.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 591, காலி வீதி, கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

6/1, 'மாருதி கோட்ஸ்'
37/1, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே.: 0602158975

தகவல்:
திருமதி மஞ்சுளா பிரபாகரன்
(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்துக்குப் பொறுப்புக்கூறும் கடமை இலங்கைக்கு உரியது

இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டிய உள்நாட்டு யுத்தத்தில் எழுந்துள்ள மனிதப் பேரவல நிலையை அடுத்து, சர்வதேச உலகின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது. சர்வதேச சமூகத்தின் முக்கிய அங்கத்துவத் தரப்புகள் ஒவ்வொன்றும் இலங்கை விவகாரத்தை ஒட்டிப் பல்வேறு கருத்துக்களைத் தொடர்ந்து முன்மொழிந்து வருகின்றன.

ஆனால், மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புகள் அந்தக் கருத்துக்களையும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களையும் கவனத்தில் கொள்வதாகவே தெரியவில்லை.

இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக மோதல்களை இடைநிறுத்துமாறு சம்பந்தப்பட்ட இரு தரப்புகளையும் ஐக் கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் வேண்டியுள்ளார்.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான பொருத்தமான -நம்பகத்தன்மை மிக்க - நடைமுறை ஒன்றை வகுக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்தியிருக்கின்றது இந்தியா.

இதேபோன்று, இலங்கையில் எழுந்துள்ள மனிதாபிமான நெருக்கடிகள் குறித்துக் கடும் கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, இலங்கையில் அரசையும் விடுதலைப் புலிகளையும் மோதலை முடிவிற்குக் கொண்டுவருவதற்கான பேச்சுக்களை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளது.

இதேவேளை, மோதலில் சிக்கியுள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கையில் உடனடி யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களும் கூட்டாகக் கோரியிருக் கின்றனர்.

- இப்படி சர்வதேச சமூகத்தின் பல தரப்புகளினாலும் இலங்கை நிலைவரத்தை ஒட்டிப் பல்வேறு கோரிக்கைகள் வரிசையாக முன்மொழியப்படுகின்றன.

புலிகள் உடனடியாக ஆயுதங்களைக் கைவிடவேண்டும், ஆயுதங்களைக் கீழே வைத்து நிபந்தனையின்றி சரணடைந்து, இலங்கை அரசின் மன்னிப்பு வழங்கும் திட்டத்தைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும், வன்முறை வழியைநிரந்தரமாகக் கைவிடுவதாகப் புலிகள் அறிவிக்க வேண்டும், தம்மால் மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் சிவிலியன்களைப் புலிகள் விடுவிக்க வேண்டும், இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டத்தை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும், அமைதித் தீர்வுக்கான பேச்சுகளை ஆரம்பித்து அதற்கான திட் டங்களை அரசு அறிவிக்க வேண்டும் - என்பன போன்ற பல கோரிக்கைகளும் மேற்படி சர்வதேசத் தரப்புகளால் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், அவை முன்மொழியும் கோரிக்கைகள் அனைத்திலும் இத்தகைய விடயங்கள் தவிர பொதுவானதாக ஒரே அம்சம் பொதிந்திருப்பது கவனிக்கத்தக்கது.

அதாவது, இலங்கையில் போரில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டும் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் அல்லது யுத்தத்தை இடைநிறுத்த வேண்டும் என்பதே அக் கோரிக்கையாகும்.

ஆனால் சர்வதேச சமூகத்தின் இக்கோரிக்கையைப் போரில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளில் ஒன்று மட்டும் பற்றி நிற்க விரும்புகையில், மற்றையது அதனை எட்டி உதைத்து நிராகரிக்க எத்தனிக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை ஏற்று யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்குத் தமது அமைப்புத் தயார் எனப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அறிவித்துள்ளார்.

ஆனால், புலிகளின் அந்த யுத்தநிறுத்த அழைப்பை, இலங்கை அரசு உடனடியாகவே அடியோடு நிராகரித்து விட்டது.

மரணத்தின் இறுதிக்கட்டத்தில் இருக்கும் புலிகளுடன் எந்தவிதமான உடன்பாடும் செய்ய அரசு தயாரில்லை என்றும், யுத்தத்தின் மூலம் புலிகளை அடியோடு இல்லாதொழித்த பின்னரே மறுவேலை என்பதே அரசின் ஒரே இலக்கு என்றும் இலங்கையின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவோ இதற்கும் சற்று மேலேபோய் யுத்தநிறுத்தம் செய்யுமாறு இலங்கைக்கு எந்த நாடும் அழுத்தம் தரவே கூடாது எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார். இது விடயத்தில், சர்வதேசத் தரப்புகளின் எந்த அழுத்தத்துக்கும் அரசு அடிபணிந்து யுத்த நிறுத்தத்துக்கு இணங்காது என்றும் உறுதிபட அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆக, 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்பது போல யுத்த மூர்க்கத்தில் - போர் வெறித் தீவிரத்தில் - நிற்கும் கொழும்பு அரசின் கண்களைப் போரியல் வெற்றி மமதையும், பேரினவாதச் சிந்தனைப் போக்கும் மறைத்து நிற்பதால் அது இந்தப் போர் வெறிமூர்க்கத்திலிருந்து வெளியே வரப்போவதில்லை என்பது தெளிவு.

அதனால் இவ்விடயத்தில் சர்வதேசத் தரப்பின் கோரிக்கைகள், வேண்டுகோள்கள், ஆலோசனைகள் என்பன ஆட்சிப்பீடத்தினால் அலட்சியப்படுத்தப்பட்டு, உதாசீனம் செய்யப்பட்டு, புறம் ஒதுக்கப்படுகின்றன.

'கெடுகுடி சொற் கேளாது!' - என்பார்கள். அதைத்தான் பின்பற்றுகின்றது போலும் இலங்கை அரசு.

இலங்கை அரசைப் பொறுத்தவரை புலிகளின் முடிவு காலம் நெருங்கிவிட்டது. இன்னும் சில நாட்களில் - அல்லது சில வாரங்களில் அந்த அமைப்பு அடியோடு அழிக்கப்பட்டுவிடும் எனக் கொழும்பில் பாதுகாப்புத் தரப்பினரும் அரசுத் தலைவர்களும் சூளுரைத்து வருகின்றனர்.

அவர்களின் கணக்குப்படியும் - சில சர்வதேச தரப்புகளின் கருத்துப்படியும் - புலிகள் விரைவில் அழிந்து போகும் தரப்பு என்பதால், சர்வதேச சமூகத்துக்குப் பதிலும் பொறுப்பும் கூறும் கடமை அவர்களுக்கு இல்லை எனலாம். அவர்கள் தொடர்ந்து நீடித்தால் அல்லவா அவற்றை அவர் கள் கவனத்தில் எடுக்கவேண்டும்........!

ஆனால், தன்னை இறை மையுள்ள தேசம் எனக் கூறும் இலங்கையின் அரசுத் தரப்போ நின்று, நிலைத்து, நீடிக்கப் போகின்ற ஆட்சிப்பீடம்.

அதனால் புலிகளிலும் பார்க்க இலங்கை அரசுதான் சர்வதேச தரப்புக்குப் பதிலும், பொறுப்பும் கூறக் கடமைப் பட்டுள்ளது.

இதை இலங்கை அரசுத் தலைமையும், அத்தலைமையிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கும் சர்வதேசத் தரப்புகளும் ஒரு தடவை கவனத்தில் எடுப்பது நல்லது.

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களை சுயாதீனமாகப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் அரசிடம் கோரிக்கை

பிரஸல்ஸ்,பெப்.26

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாகத் தங்கவைக்கப்படுகின்ற முகாம்களை சுயாதீனமாகப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரசல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்கள் மற்றும் அவற்றில் தங்க வைத்தல் என்பன சர்வதேச தரத்திற்கேற்ப இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது. அத்துடன் தற்காலிக முகாம்களைச் சுயாதீனமாகப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்குமாறும் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. தற்காலிக முகாம்களில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும். அத்துடன், யுத்தத்தை நிறுத்திப் பொதுமக்களை அங்கிருந்து அகற்றுவதற்கான மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இடமளிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் வருகை தந்துள்ள மக்கள் போதிய வசதிகளுடன் அமைக்கப்பட்ட அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு அரசிடம் கோரிக்கை விடவேண்டிய அவசியமில்லை. அங்குள்ள உண்மைத் தன்மையை நாம் எடுத்துக்கூறியுள்ளோம். அத்துடன் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் என்ன நடைபெறுகின்றது என்பதை பார்வையிடுவதற்கு வரு மாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் - என் றார்.(50)

# இடம்பெயர்ந்த பொதுமக்களில் 750 கர்ப்பிணித் தாய்மார்கள்

கொழும்பு, பெப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்குச் சென்றுள்ள பொதுமக்களில் 750 கர்ப்பிணித் தாய்மார்கள் இருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான வைத்திய வசதிகள் வவுனியா, செட்டிக்குளம் மற்றும் பூவரசங்குளம் ஆகிய வைத்தியசாலைகளில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்குச் சிகிச்சை பெற்றுக்கொடுப்பதற்காகக் கொழும்பில் இருந்து மகப்பேறு மருத்துவ நிபுணர் ஒருவர் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை கர்ப்பிணித் தாய்மார்களைத் தங்கவைப்பதற்காக வவுனியா ஆயுர்வேத மருத்துவமனையின் ஒரு பகுதிகளைச் சுகாதார அமைச்சு பெற்றுக்கொண்டுள்ளதுடன் அங்கு பிரசவத்தின் பின்னர், குழந்தைகளை உறங்கவைப்பதற்கும் பாலூட்டவும் தனியான இடம் ஒன்றை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மகப்பேற்றுப் பிரிவிற்கான சுகாதாரப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# திருமலையிலிருந்து 112 நோயாளர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றம்

கொழும்பு,பெப்.26

திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வன்னி நோயாளர்களுள் சிலர் நேற்றுமுன்தினம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் வன்னிநோயாளர்களுள் 112 பேர் திருகோணமலை வைத்தியசாலையில் இருந்து மன்னார் பொதுவைத்தியசாலைக்கு மாற்றும் முகமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கந்தளாய் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

பின்னர் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் கந்தளாய் வைத்தியசாலையிலிருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு 112 நோயாளர்களும் அரச பஸ் மற்றும் அம்புலன்ஸுகளின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 47 நோயாளர்களும் அவர்களுடைய உறவினர்களுமாக 112 பேர் மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# ஊடக வள நிலைய ஒலி, ஒளி பதிவுக் கலையக திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஒலி, ஒளி பதிவுக் கலையகத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண் முகலிங்கன் கலையகத்தை திறந்து வைப்பார். யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைத்தின் ஆலோசகர் சர்வதேச ஊடக வல்லுநருமான கலாநிதி ஹென்றிக் குறூநெற், யாழ்.பல்கலைக் கழககலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (9)

# முன்பள்ளிகளுக்கு செயல் நூல்கள்

மண்டுவில்,பெப்.26

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட 20 முன்பள்ளிகளுக்கு வடக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட செயல்நூல்கள் முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை செயல்நூல்கள் ,விநியோகிக்கப்படவுள்ளதாகத் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-51)

# போதிய மருந்துப் பொருள்கள் இல்லாமையால் புதுமாத்தளன் மருத்துவமனையில் 13 பேர் உயிரிழப்பு

வவுனியா,பெப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுமாத்தளன் பகுதியில் இயங்கும் தற்காலிக மருத்துவமனையில் கடந்த இரண்டு வாரங்களாக மருந்துப் பொருள்கள் இல்லாத காரணத்தால், சிகிச்சை வழங்கமுடியாமல் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வரதராஜன் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவை சர்வதேச குழுவின் கப்பல் மூலம் 325 நோயாளர்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு கப்பல் வந்து சென்ற பின்னர் கூட ஷெல் தாக்குதல்களால் காயமடைந்த பலர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

பொக்குளிப்பான் போன்ற தொற்று நோய்கள் அங்கு கடுமையாக பரவிவருகிறது எனக் கூறியுள்ள டாக்டர் வரதராஜன், தமக்கு வெளிநோயாளர் பிரிவில் பயன்படுத்தக்கூடிய மிகவும் குறைந்த அளவிலான மருந்துப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், சத்திர சிகிச்சை போன்றவற்றுக்குப் பயன்படுத்தும் முக்கிய மருந்துகள் எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் கூறினார். (சி)

# நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் 2009/10 கல்வி யாண்டுக்கான பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி மற்றும் பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 09ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை நடைபெறும் என பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் மேலதிக விவரங்களை அறிய அலுவலகத்ததுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (6)

## நாளை

| | |
|---|---|
| மாசி 15 | 27.02.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.ப. 08.01 வரை |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி |
| | மு.இ. 10.30 வரை |
| சுபநேரம்: | 06.20 - 07.50 |
| ராகுகாலம்: | 10.58 - 12.28 |

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இலங்கை குறித்து ஜனாதிபதி ஒபாமா குரல் கொடுக்க வேண்டும்

## அமெ.அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் குரல் கொடுக்க வேண்டும்மென அமெரிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கான விசேட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியொருவரை நியமிப்பது குறித்து அமெரிக்க அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு வலியுறுத்த் வேண்டுமென அமெரிக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய ஆசிய பணிப்பாளர் மரியாம் யாரு தெரிவித்துள்ளார்.

2லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் யுத்த பிரதேசத்தில் சிக்கியிருப்பதாகவும், இலங்கையின் வடக்கில் அமெரிக்கா உடனடியாக மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இலங்கை அரச படையினர் சர்வதேச யுத்த சட்டங்களை மீறிச் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சியாகச் சர்வதேச யுத்த சட்டங்கள் மீறப்பட்டால் அமெரிக்காவினால் வழங்கப்படும் உதவிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதத்தில் மட்டும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1066 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 10 34 40 63

24-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400496145 - 400516327

ஜக்பொட் பரிசு ரூபா. 10,365,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 212,799 | 20/- | 4,255,980/- |
| 2 இலக்கங்கள் | 19,558 | 40/- | 782,320/- |
| 1 இல. + லக்கினம் | 19,378 | 60/- | 1,162,680/- |
| 2 இல. + லக்கினம் | 1,840 | 200/- | 368,000/- |
| 3 இலக்கங்கள் | 522 | 1000/- | 522,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 10,365,400/- | - |
| மொத்தம் | | | 8,180,980/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 254,154 | | 8,680,980/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 10,840,975/-

தொடர் இலக்கம் 500507987 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 400498963-2-29 |
| கொழும்பு | 400500629-3-05 |
| மட்டக்களப்பு | 400506296-0-38 |
| இரத்தினபுரி | 400504517-0-28 |
| கொழும்பு | 400510672-1-31 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஊழியர் த.கனகேஸ்வரன் (கனகி)
அவர்களது அன்புத் தாய்

## தம்பு சிவபாக்கியம்

காலமாகியமைக்கு எமது அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தெல்லிப்பழை. மகாஜனக் கல்லூரிச் சமூகம்.

# 45 ஆம் நாளிலும் உன்னுடன்...

மண்ணில்: 12.09.1973 விண்ணில்: 13.01.2009

## கந்தசாமி சிவானந்தம் (பாண்டி)



ஆற்றொணாத் துயருடன்
45 ஆம் நாளிலும்... எம்
பிறப்பும் இறப்பும் வாழ்வின்
நியதி என்றாலும் - இது
சதியா? விதியா
காரணம் தான் புரியவில்லையே
எது எப்படியாயினும்
தலைவா... நீங்கள்
எம் நினைவுகளிலேயே என்றும்
வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

48A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பு பாக்கியம்



புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பருத்திக்கலட்டி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பு பாக்கியம் நேற்று (25.02.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் தம்புவின் அன்பு மனைவியும் கதிரமலை, கனகேஸ்வரன் (மகாஜனக் கல்லூரி), கனகநாயகி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.கனகேஸ்வரன் (மகன்)
(கனக்கி).

பருத்திக் கலட்டி,
சுன்னாகம். (83030)

# ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, பெப்.26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை, பண்பாட்டுப் பேரவையின் மாதாந்தவெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் 134 ஆவது இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள். (1-236)

# நேர்முகப் பரீட்சை நாளைக்கே நடைபெறும்

யாழ்ப்பாணம்,பெப்,26

தேசிய பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்காக இன்று இடம்பெறவிருந்த நேர்முகப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நேர்முகப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்று மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (1)

# தொழில் பாதிப்பு நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.26

தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கான பெப்ரவரி மாத நிவாரணத்துக்கான வழங்கற் கட்டளைகள் இன்று வியாழக்கிழமை ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

செயலகத்தில் வழங்கற் கட்டளைகளைப் பெற்று விநியோக நடவடிக்கையை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்குமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார். (1)

# விளையாட்டு நிகழ்வுகள்

வேலணை, பெப்.26

வியாவில் சைவ வித்தியாலயத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தொழிலதிபர் க.சோமசேகரம் பிரதம அதிதியாகவும் கோட்டக் கல்விப் பணியாளர் ச.பாஸ்கரன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்வர். (1-217)

* * *

கரம்பொன் சண்முகநாத ம.வி யின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பாடசாலை மைதானத்தில் அதிபர் க.தேவராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கோட்டக்கல்விப் பணியாளர் ச.பாஸ்கரன் பிரதம விருந்தினராகவும், ஆசிரிய ஆலோசகர் எல்.யோகநாதன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.தவனேஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-267)

* * *

யாழ்ப்பாணம், பெப்.25

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வரணி இளைஞர் கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

மட்டுவில் வளர்மதி வி.க. மைதானத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்த அணிகள் மோதுகின்றன. (1-207)

* * *

கோப்பாய், பெப்.26

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் கலந்து கொள்வார். (1-72)

* * *

யாழ்ப்பாணம், பெப்.26

கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலையின் பாடசாலைப் பெயர்வளைவு திறப்பு விழாவும், வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட துணைத் தலைவர் [illegible] வை. தியாகராசா கலந்து கொள்வார். (1-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகம் பார்வதி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் பார்வதி நேற்று (25.02.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கராஜா மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் புவனேஸ்வரி, விஜயகுலராணி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.49/01, சிறாம்பியடி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஆறுமுகதாஸ் இராசேஸ்வரி



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகதாஸ் இராசேஸ்வரி நேற்று (25.02.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சோமசுந்தரம் - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகளும் அமரர் செல்லர் ஆறுமுகதாஸின் (ஓய்வுபெற்ற உதவித் தபால் அதிபர்) அன்பு மனைவியும் கதிவாணி, கஜமாலினி, அமரர் கதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் சிவபாதசுந்தரம், கமலேஸ்வரி, சுமத்திராதேவி, இந்திராதேவி, வசுந்திராதேவி, பத்மாசனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சொர்ணலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சறோஜினிதேவி (கொக்குவில்), சந்திரராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர், J.P.), மனோகரன் (ஓய்வுபெற்ற உப அதிபர்), கமலநாதன் (அண்ணா கோப்பி, கொழும்பு), சற்குணதேவி (கனடா), தியாகராசா (சுவிஸ்), அமரர்களான மனோன்மணி, இரத்தினேஸ்வரி, சுகிர்தலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சத்தியகாந்தனின் (யுனிக் வீடியோ) அன்பு மாமியாரும் ஹரிணி, ஹரிஷா, ஹம்ஸத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2009) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்:
பா.சத்தியகாந்தன் (மருமகன்)
(UNIQUE VIDEO COMPLEX).

## கனகராஜா அரசரட்ணம்

( பிரதம ஆசிரியர், 'தமிழர் செந்தாமரை')



கொழும்பை பிறப்பிடமாகவும் Toronto வை வதிவிடமாகவும் கொண்ட கனக. அரசரட்ணம் (பிரதம ஆசிரியர், 'தமிழர் செந்தாமரை' ) அவர்கள் 24.02.2009 அன்று Toronto வில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு கனகராஜா - ஜெயலட்சுமியின் அன்பு மகனும், தம்பிராஜா - அமரர்பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோ, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துவின் மாமனாரும், மதுமிதாவின் அன்பு அப்பப்பாவும், விஜயராஜா - மீனா அவர்களின் சம்பந்தியும், புஸ்பம், அமரர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம் மற்றும் மனோரஞ்சிதம் (கனடா), இராஜேஷ்வரி, குணரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் சிவராம், மனோகரி, செந்தில், மனோ (கொழும்பு), அமரர் இராஜேஷ்வரன், ஆனந்தன், ஜெனி (கொழும்பு), பேபி, ரஞ்சன், பவா, ஜெயந்தி, சந்திரன், மோகன் (கனடா), ஆனந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.02.2009 சனிக்கிழமை பி.ப. 4 மணிமுதல் இரவு 9 மணிவரையும், 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிமுதல் இரவு 9 மணிவரையும், இல. 3280, Sheppard Avenue East, Scarborough (Warden & Sheppard) இல் உள்ள Highland Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு 02.03.2009 திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணி வரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 12 மணியிலிருந்து 1 மணி வரை 375, Mount Pleasant Road, (Mount Pleasant & St. Clair) Toronto இல் அமைந்துள்ள Mount Pleasant Cemetry இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி - ராஜி; மகன் - விநோத்
416-707-6262, 905-477-0076,
416-824-8815.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொன் அணிகளின் போர்' நாளை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.26

'பொன் அணிகளின் போர்' (Battle of the Golds) என வர்ணிக்கப்படும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 92 ஆவது மாபெரும் துடுப்பாட்டப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

நாளை மறுதினம் சனிக்கிழமையும் இந்தப்போட்டி தொடரும். காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை போட்டி நடைபெறும்.

### சென்.பற்றிக்ஸ் அணி

சென்.பற்றிக்ஸ் அணிக்கு எம்.ஏ.நிலோசன் தலைமை தாங்குகின்றார். இவரின் தலைமையில் சென்.பற்றிக்ஸ் அணி இவ்வாண்டு 7 போட்டிகளில் பங்குபற்றியுள்ளது. இப்போட்டிகளில் மகாஜனக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றை இனிங்சினாலும் கொக்குவில் இந்துக் கல்லூரியை 8 விக்கெட்டுக்களாலும் வென்றுள்ளது.



சென்.பற்றிக்ஸ்

இருப்பவர்கள் (இ-வ)- பி.ஜெயக்குமார் (அணிப்பொறுப்பாசிரியர்), எஸ்.மிளான்டோ, எஸ்.சகாயராஜா (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), எம்.ஏ.நிலோசன் (அணித் தலைவர்), வணபிதா எம்.ஜெறோ செல்வநாயகம் (அதிபர்), பி.நவதீபன் (அணி உபதலைவர்), ஏ.எஸ்.நிசாந்தன் (பயிற்றுநர்), ரி.லவதீசன்.

நிற்பவர்கள் (இ-வ) - எம்.வி.ஹமில்ரீன், ஏ.எம்.மனோஜ், ஏ.கவாஸ்கர், ஜி.ஜெகன் றெஜிலஸ், ஜே.தர்சன், எல்.கஜமுகன், எம்.டி.சஜீந்திரன், எஸ்.ஏ.ஜெறி ஜோன்சன், பி.மைக்கல், ஜி.றகீல்சன், கே.நிறோசன், ஏ.எம்.நோபேட்.

### யாழ்ப்பாணக் கல்லூரி அணி

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எஸ்.நிறோசன் தலைமை தாங்குகின்றார். இவரின் தலைமையில் இதுவரை 7 போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பங்குபற்றியுள்ளது. இப்போட்டிகளில் கொக்குவில் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியவற்றை இனிங்சினாலும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றை விக்கெட்டுக்களாலும், ஓட்டங்களாலும் யாழ். இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றை முதல் இனிங்சினாலும் யாழ்ப்பாணக் கல்லூரி வென்றது.

தொகுப்பு:
அதிரன், நேசன்

இரு கல்லூரிகளுக்கும் இடையே இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 31 ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் அணியும், 16 ஆட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளன. 26 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.



யாழ்ப்பாணக் கல்லூரி

இருப்பவர்கள் (இ-வ)- எஸ்.எம்.திலீபன் (உதவிப்பயிற்றுநர்), ஜி.குகன் (பயிற்றுநர்), பி.பிரசாத், எஸ்.நிறோசன் (அணித்தலைவர்), என்.ஏ.விமலேந்திரன்(அதிபர்), ஜே.நிகேதன் (அணி உப தலைவர்), வி.ஜோயல்ஷெகான், வி.கஜநாதன், பி.எல்.மோகனகுமார் (உடற் கல்வி இயக்குநர்).

நிற்பவர்கள் (இ-வ)- ரி.ஜெயந்தகுமார், கே.ஜசீவன், ஆர்.பென்டில்கரன், எஸ். சீராளன்,பி.ஸ்ரீகுகன், ரி.பிரியலக்ஷன், கே.பிரஷோபனன், ஜே.பென்ஜமின், எஸ். கோமளதரன், பி.துஷ்யந்தன், எஸ்.மதுசன், எம்.மதுசன், ஈ.டிலக்ஷன்.

கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இந்த ஆண்டு இரு அணிகளிலும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இடம் பெற்றுள்ளமையால் 'பொன் அணிகளின் போர்' கடும் பலப் பரீட்சையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அனுபவ வீரர்களைக் கொண்ட இரு அணிகளின் பலப்பரீட்சை

---

## சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தால் இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.26

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தேசிய இலக்கியப் பெருவிழாவையொட்டி சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவில் வசிப்போர் இப்போட்டியில் பங்கு பற்றலாம். கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் சிறுகதை, கவிதையாக்கம், கட்டுரை, பாடலாக்கம் ஆகிய போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள், திறந்தபோட்டியாளர்கள் என நடைபெறவுள்ள இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் அடுத்தமாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும் என்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (9)

## தவக்காலச் சிந்தனை



## பிறர் உறவே இறை விருப்பு

எம்மில் பலர் குடும்பத்திலும் அயலவர் மட்டிலும் பகைமை குரோதங்கள் ஒப்புவின்மை என்பனவற்றை வைத்துக்கொண்டு வழிபாடுகள், காணிக்கைகள், நேர்த்திகள் போன்றவற்றை நிறைவேற்றுகின்றோம். இது வெளிவேடத்தனமில்லையா? இந்தப் பொருந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா? இறைவனை மட்டும் அன்பு செய்ய வேண்டும் என்பதா இறைவனின் கட்டளை? நம் சகோதரர், அடுத்திருப்போர் அன்புக்குரியவர்கள் இல்லையா?

தூய உள்ளத்தோடு, மேற்கொள்ளும் வேண்டுதல்களை இறைவன் புறந்தள்ள மாட்டார். இதுவரை காலமும் இவ்வாறு செய்யத் தவறியிருந்தால் இன்றோடு அதை மறந்து விட்டு இன்றிலிருந்து உறவுகளைச் சீர்படுத்த முனைவோம்.

மன்னித்தல் என்பது சிரமமானதுதான் ஆனால் மன்னிப்பு இன்றி அன்பு வெளிப்படாது. அன்பு உயிரோட்டம் உள்ளதாக வேண்டுமெனில் சினம் கொள்வதை விடுத்து மனங்களை மாற்றுவோம். பிறருக்குத் தீமை செய்வதை நிறுத்துவதோடு தீமையானவற்றை நினையாதிருப்போம்.

தீயவரே தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு மனம்மாறி என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு வாழ்வர். (ஏசே. 18.21-22) தீமை புரிவோரை, அநீதியானவரை, மன்னிப்பு அற்றோரை சாகடிக்கவென்று அவர்கள் மனம்மாறவே இறைமகன் இயேசு மனுவுருவெடுத்து தமது உயிரைக் கொடுத்தார். அவர் என்மீது கொண்ட பேரன்பிற்கு பிரதி உபகாரமாக பிறரை மன்னித்து இத் தவக்காலத்திலிருந்து அன்பை வளர்ப்போம். உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் போது பகைமை பனிபோல உருகிவிடும். அந்த அன்புதான் இறைவனுக்கும் மனிதனுக்கும் ஏற்புடையதாக அமையும்.

## நோர்வே நாடாளுமன்றத்தின் முன்னால் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.26

வன்னியில் தொடரும் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும் அங்கு உடனடியாகப் போர்நிறுத்தப்படவேண்டும் எனக் கோரியும் கடந்த திங்கட்கிழமை நோர்வே நாடாளுமன்றத்துக்கு முன்னால் புலம்பெயர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த திங்கட்கிழமை மதியம் 12 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் இளையோர் அங்கத்தவர் ஒருவரின் உரையுடன் ஆரம்பிக்கப்பட்டது. வன்னி மக்களின் அவல நிலையைச் சித்திரிக்கும் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

அந்த ஆர்ப்பாட்டத்தில் எஸ்.வி. என்ற கட்சியின் முக்கியஸ்தவர்கள் சிலரும் உரையாற்றினர். இதில் நோர்வேயிலுள்ள அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் முதல் முறையாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

தமிழீழம் அமையவேண்டும் என்ற கொள்கையை எஸ்.வி. கட்சி ஆதரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

## வவுனியா பூவரசங்குளம் வைத்தியசாலையில் அம்மை நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, பெப்.26

வன்னிப் போர்முனைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் மத்தியில் அம்மைநோய் தொற்றியிருப்பதால் நூற்றுக்கும் மேற்பட்ட அம்மை நோயாளர்களுக்கு பூவரசங்குளம் வைத்தியசாலையில் தனியான சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

அம்மை நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால், பூவரசங்குளம் வைத்தியசாலையில் அம்மை நோயாளர்களுக்காகத் தனி இடம் ஒதுக்கி, அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரேயொரு வைத்தியரையும், தாதி ஒருவரையும், மருத்துவமாது ஒருவரையும் மாத்திரம் கொண்டுள்ள பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு அம்மை நோய்க் குரிய மருந்துகளை பிராந்திய சுகாதார அலுவலகம் வழங்கியிருக்கிறது எனவும், எனினும் ஆளணி பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் புதிய ஆளணி அங்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இடைத்தங்கல் முகாம்களில் இருந்து இந்த வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ள அம்மை நோயாளர்களை, முகாம்களில் உள்ள அவர்களது உறவினர்கள் சென்று பார்ப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வே.தனபாலசிங்கத்தின் 'சிந்தனைக் களஞ்சியம்' என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, மல்லாகம் ம.வி.அதிபர் மா.நாகேந்திரசீலன், வைத்திய கலாநிதி ச.இளங்கோஞானியர் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

நூலின் முதற்பிரதியை தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனிடம் இருந்து அண்ணா தொழிலகத்தைச் சேர்ந்த ந.திவாகர் பெற்றுக் கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் நான்காவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்தில் காணலாம். *(படங்கள்: லிங்கம்)*

# ஆங்கிலக் கல்வி அறிவு இருந்தால்தான் நாம் பல்வேறு துறைகளிலும் முன்னேற முடியும்

## இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

வடமராட்சி,பெப்.26

ஆங்கிலக் கல்வி அறிவு இருந்தால் தான் நாம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் காணமுடியும். எனவே மாணவர்கள் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார், இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தியாகராசா.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

பிறக்கும் பிள்ளைகள் எல்லோரும் கெட்டிக்காரர்கள் தான். ஆனால் அவர்கள் வளர்க்கப்படும் முறையிலும் வழிகாட்டலிலும்தான் அவர்களின் கெட்டித்தனம் நிர்ணயிக்கப்படுகிறது.

விளையாட்டுப்போட்டி மாணவர்களின் உடற்பயிற்சிக்கு இன்றியமையாதது. ஆகையால் ஒவ்வொரு மாணவரும் குறைந்தது இரு விளையாட்டுக்களிலாவது பங்குபற்ற முயற்சிக்க வேண்டும். வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. ஏனெனில் எல்லோரும் வெற்றி பெற முடியாது. வெற்றி தோல்விகளைத் தாங்கும் மனப்பான்மையை வளர்ப்பதே விளையாட்டுப் போட்டியின் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

இப்போது மாணவர்கள் விளையாடுவதற்கு நேரம் பற்றாக் குறையாகவுள்ளது. இதற்குக் காரணம் கல்வி கற்பதற்கு பாடசாலையுடன் மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்களுக்கும் மற்றும் தனியாரிடமும் செல்வதேயாகும்.

மனம் இருந்தால் இடம் உண்டு என்பார்கள். அதேபோல மாணவர்கள் விளையாட்டிற்கும் சிறிது நேரத்தையாவது ஒதுக்கி மாணவர்கள் தங்களது உடல் நலத்தைப் பேண வேண்டும்.

மாணவர்கள் எத்தனை இடங்களுக்குச் சென்று கல்வி கற்றாலும் கற்றவற்றை மனதில் படியச் செய்ய வேண்டும். இதற்குச் சிறந்த வழி அன்றாடம் கற்றவற்றை அன்றே வீட்டில் கற்று முடித்துவிட வேண்டும்.

அப்போதுதான் கற்றபயனை அடைந்து கெட்டிக்காரனாகலாம். இதே போன்று விளையாட்டிலும் அநேகநேரம் பயிற்சிகள் பெற்றால் வெற்றி பெறலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

## சேதமடைந்த வீதிகளை புனரமைக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சேதமடைந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளதாக மேற்படி பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பல வருடங்களாகத் திருத்தப்படாத வீதிகளைத் திருத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்குரிய போதிய நிதி இல்லாத காரணத்தால் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இது சம்பந்தமான உதவிகள் கோரப்பட்டுள்ளது.

நிதி கிடைத்ததும் முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் புனரமைக்கப்படும். பொது மக்களின் கோரிக்கைகள் நிச்சயமாக கவனத்தில் எடுக்கப்படும். நிதிப்பற்றாக் குறை காரணமாகவே புனரமைப்புக்கள் கால தாமதமாகின்றன. நிதி கிடைத்ததும் உடனடியாகவே புனரமைப்புக்கள் ஆரம்பமாகும் என்று அவர் மேலும் கூறினார். (203-20)

## பேடன் பவல் தின நிகழ்வுகள்

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட சாவகச்சேரிக் கிளையின் சாரணர், பேடன் பவல் பிரபுவின் நினைவு தின நிகழ்வுகளை இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரிஅதிபர்அ.கயிலாயபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

(203-207)


## முக்கிய அறிவித்தல்

நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் எமது நிறுவனத்தின் பெயரால் தனியார் வியாபாரிகள் சிலர் பால் விற்பனை மேற்கொள்வதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே வாடிக்கையாளர்கள் பாலைக் கொள்வனவு செய்யும்போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம்தானா என்பதை உறுதிப்படுத்தி தரமான பாலைக் கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
(சி/557269) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.


## மனிதனிலுள்ள இறைவனின் மூன்று அம்சங்கள்

வாழ்க்கை என்ற மரத்தை வளரச்செய்யவும், அதன் வளமையைப் போஷிக்கவும், இதய உணர்ச்சிகளை விரிவடையச் செய்ய வேண்டும். ஆகவேதான் பண்டைய ஆசிரியர்கள் "அன்னம் ப்ரஹ்மா, ரஸோவிஷ்ணு வாக் மஹேச்வர என்று கூறினர். பண்டைக்கால முனிவர்கள் உணவு அருந்துவதற்கு முன்னர் இந்தப் பிரார்த்தனையைக் கூறினர். உணவு, உடலின் எல்லாம் பகுதிகளுக்கும் தனது சாரத் தைப் பகிர்ந்தளித்து உடலின் ஆற்றலைப் பாதுகாக்கிறது. எல்லா உறுப்புகளின் புலன்களின் செயல்திறனைப் பாதுகாக்க, மனது மிகவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். சத்யம் (உண்மை) நிறைவேற வாக்கு அல்லது பேச்சு உண்மையாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவையான உடல், மனம், பேச்சு (காயம் - மனோ - வாக்) ஆகிய மூன்றும் இறைவனின் மூன்று அம் சங்களான பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகும். விஷ்ணு எங்கும் வியாபிக் கின்றவர் மனதும் எங்கும் வியாபிப்பது. 'மனோமூலம் இதம் ஜகத்' என்று கூறப்படுகிறது.

மகேஸ்வரன் ஒலியை, சப்தத்தை (வாக்) குறிக்கின்றார் ஆகவேதான் இறைவன் முதலாவதாக ஸப்தப்ரம்மமயீ, பிறகு சராசரமயீ, ஜ்யோதிர்மயீ, வாங்மயீ, நித்யானந்தமயீ, பராத்பர மயீ, மாயாமயீ, ஸ்ரீமயீ எனப்படுகிறார். அன்பை விரிவடையச் செய்வதன் மூலம், தெய்வத்துவத்தின் எட்டு வகைகளையும் நாம் அடைகிறோம். ஒவ்வொருவரும் உள்ளிருக்கும் தெய்வத்துவத்தை அறிந்துணர வேண்டும். பிறகுதான் அவனோ அவளோ உண்மையான வாழ்க்கையை நடத்துவதாகக் கருதப்படுவார்.



சாயி சிந்தனை


## 15ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வன் நாகமுத்து சற்குணபாலா
(அங்கு) ஜேர்மனி

தாய் மடியில்
05.12.1965

ஆண்டவன் அடியில்
26.02.1994

திதி: பூர்வ பக்ஷ பிரதமை
(26.02.2009)

ஓடி மறைந்தது மகனே பதினைந்து வருடங்கள்
என்றும் உம்மை மறக்க முடியவில்லை
வாடி வதங்கி வாழ்கின்றோம்
உம் நினைவில்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

M.N.மகேந்திரன்
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, ஐயா,சகோதரர்கள்

(83025)


## திருட்டுகள் அதிகரிப்பு

சங்கானை, பெப்.26

சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியில் அமைந்துள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள், பால்மா வகைகள் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

இதனால் குறிப்பிட்ட கடை உரிமையாளருக்குப் பல லட்சம் ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-

சங்கானை காளி கோயிலில் அண்மையில் ஒலி பெருக்கிச் சாதனங்கள் திருடப்பட்டுள்ளன. மணிக்கூட்டுக் கோபுரத்தில் வலுவான முறையில் பொருத்தப்பட்டிருந்த நான்கு ஒலி பெருக்கிகளே திருடப்பட்டுள்ளன.

இதேபோன்று பேச்சி அம்மன், மாவடி வைரவர் ஆலயங்களிலும் அண்மையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிகரித்துவரும் இவ்வாறான திருட்டுக்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (203-29)


## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
26 ✱ 12 ✱ 1966



ஆண்டவன் அடியில்
26 ✱ 02 ✱ 2001

திருமதி மகாலிங்கம் சித்ரா (கலா)

திதி: பூர்வபக்ஷ பிரதமை

மின்னலாய் வந்தது உன் மரணம்
வானவில்லாய் எம் மனதில் உன் நினைவுகள்
சூரியனாய் ஒளிர்கின்றாய் எம் வாழ்விலே
மதி போன்ற உன் முகத்தை
மறந்திட முடியுமா இவ்வுலகில் உள்ளவரை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

K.குணரட்ணம்
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

அம்மா, அப்பா,
சகோதரன், சகோதரிகள்

(83022)



## மரண அறிவித்தல்

திருமதி துரையப்பா கனகம்மா



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 234 நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரையப்பா கனகம்மா நேற்று (25.02.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி (தரணிகல வர்த்தகர்), செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதிப்பிள்ளை சிவயோகம் அவர்களின் அன்புச் சகோதரியும் கமலாம்பாள், காலஞ்சென்ற கதிரவேலு (மலாயன்கபே) ஆகியோரின் மைத்துனியும் செல்வராணி, ஸ்ரீஸ்கந்தராசா, தயாநிதி, சாந்தநிதி, கலாநிதி, சந்திரஹாசன், இன்பநிதி, கிருபாநிதி ஆகியோரின் பெரிய தாயும் முரளிதரன், செல்வநாதன், மகேந்திரன், பிறேம்குமார், சகுந்தலாதேவி, துரைராஜா, யோகேஸ்வரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.முரளிதரன் (மருமகன்),
உசா (மகள்).

234, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (83024)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## நிருபா குணசேகரலிங்கம்
**பெறுபேறு: 3ஏ (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)**

நான் ஆரம்பக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கற்றேன். எனக்கு ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஆசிரியர்கள் அனைவரும் சிறந்த முறையில் கல்வியை வழங்கினர். அவர்கள் என்றும் என் நன்றிக்குரியவர்கள்.

நான் உயர்தரத்தில் எந்தப் பாடங்களைத் தெரிவுசெய்வது என்ற குழப்பத்தின் மத்தியில் கலைப்பிரிவினைத் தெரிவுசெய்தேன். நான் கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றில் அதிகம் ஈடுபடுவேன். கலைப்பிரிவில் பொருளியல், தமிழ், இந்துநாகரிகம் ஆகிய பாடநெறிகளைத் தேர்ந்தெடுத்தேன். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படவேண்டும் என்ற ஆர்வத்தில் படித்தேன். பல பிரச்சினைகளுக்கு மத்தியில் என்னால் முதல் தடவை வெற்றிபெற முடியவில்லை. நல்ல பெறுபேறாக இருந்தபோதும் வெட்டுப்புள்ளி காரணமாகப் பின்தள்ளப்பட்டேன். இரண்டாம் தடவை படிக்கும் எண்ணம் இல்லை என சோர்வுற்றிருந்தபோது பல அறிவுரை கூறி உற்சாகப்படுத்தியவர்கள் எனது பெற்றோர்கள். குறிப்பாக என் அன்பு அண்ணா குணரூபன் குறிப்பிடத்தக்கவர். இறைபக்தியும், குருபக்தியும், விடாமுயற்சியும் எனக்கு நல்ல பெறுபேற்றைப் பெற்றுத்தந்தன.

தங்களது பாடத்தை மட்டுமன்றி மூன்று பாடத்திலும் கவனமெடுத்துப் பல அறிவுரை கூறி உற்சாகப்படுத்திய ஆசிரியர்கள் கு.ஈஸ்வரி, கி.நடராஜா, ப.ஜோதீஸ்வரன் என்றும் என் அன்பிற்கும், நன்றிக்குமுரியவர்கள். மற்றும் திருமதி சண்முகலிங்கம் ஆசிரியை, கிரிதரன், அன்ரனி ஆசிரியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

எனக்கு வழிகாட்டிய அதிபர், உபஅதிபர், ஏனைய ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சண்முகராசா கார்த்திகா
**பெறுபேறு: 3ஏ (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**



நான் தரம் 1-5 வரை தம்பசிட்டி மெ.மி.த தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுப் பின்னர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு அடைந்தேன். கலைத்துறையில் எனக்கு இருந்த ஆர்வம் காரணமாக அத்துறையைத் தெரிவுசெய்தேன். அத்தகைய தெரிவு இன்று நான் பல்கலைக்கழகம் நுழைவதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. கலைத்துறையில் தமிழ், இந்துநாகரிகம், அளவையியல் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

எனது பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், சகோதரிகள் ஆகியோர்களது ஊக்குவிப்பு உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றுக்குக் காரணமாக அமைந்தது.

எனவே இத்தருணத்தில் எனது பெறுபேற்றிக்கு உந்து சக்தியாகவும் அடிப்படையாகவும் அமைந்த ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரிகள் மற்றும் எனது நண்பிகளுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எதிர்காலத்தில் நான் ஆசிரியத்துறையில் ஈடுபட விரும்புகிறேன்.



## இரத்தினம் பிறேமிளா
**பெறுபேறு: 3ஏ (கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி)**

நான் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரை கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியிலே கல்விபயின்றேன். நாம் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்பதற்காக அதிபர் எமக்கு வாரந்தோறும் பயிற்சிப் பரீட்சை வைப்பார். அது எமக்குப் பயனுள்ள ஒன்றாகவே அமைந்துள்ளது. மேலும் எமக்குக் கல்விக் கண்ணைத் திறந்து வைத்த ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்தவகையிலே உயர்தரத்தில் கல்வி பயிற்று வித்த க.நளினி, தர்மதேவன், பிறேமச்சந்திரன், வல்லவாம்பிகை போன்ற ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எமது கண்கண்ட தெய்வங்களாவர்.

மேலும் நான் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றி சித்தியடைய முடியாதிருந்தது. அப்போது நான் மிகவும் மனவேதனைப்பட்டேன். அப்போது எனக்கு குடும்பத்தவரும், நண்பர்களும் கூறிய ஆறுதல் தைரியமாக இருந்தது. அதனால் மீண்டும் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆயினும் உச்சில் அம்பாளும் எனக்குக் கருணை காட்டி யுள்ளார்.

மேலும் நான் சித்தி பெற ஒத்துழைப்பு நல்கிய குடும்பத்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அப்பா கடைத்தொழிலாளி. தம்பி ஒருவர் உயர்தரத்தில் கல்வி கற்கிறார். நான் படிக்கும்வேளைகளில் எனக்கருகில் இருந்து ஆர்வம் தருபவர் எனது அம்மா.

நான் கலைப்பிரிவில் கல்வி கற்கமுயன்றபோது, எல்லோரும் கலை என்றதும் ஏளனமாகவும், நக்கலாகவும் இருந்தார்கள். அப்போதே என்னுள் ஒரு சவால் எழுந்தது. நான் எப்படியும் பல்கலைக்கழகம் போகவேண்டும் - என்று சபதமெடுத்தேன். எனவே நான் இன்று பெருவிருட்சமாக வளர நீர் ஊற்றி வளர்த்த அதிபர், ஆசிரியர்கள், தனியார்கல்வி நிறுவனம், ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர், நண்பர்கள் அனைவரிற்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## ஜீவிதா சச்சிதானந்தம்
**பெறுபேறு: 2ஏபி (கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி)**



நான் தரம் 1இலிருந்து இந்தப் பாடசாலையில்தான் படித்தேன். 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். சித்தியடைந்ததும் வேறு பாடசாலைக்கு மாறவேண்டுமென ஆசைப்பட்டேன். வீட்டில் அனுமதிக்கவில்லை என்பதால் தொடர்ந்தும் இங்கேயே படித்தேன். ஜி.சீ.ஈ. [சா/த]இல் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன். ஜி.சீ.ஈ. [உ/த]இல் எனக்குப் பல குழப்பங்கள் ஏற்பட்டபோதும் நான் நம்பிக்கையை இழக்காது படித்தேன். எனது இந்த நிலைக்குப் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களின் ஊக்குவிப்புத்தான் காரணம். எனது அப் பப்பாவும் எனது படிப்புக்கு நிறைய உதவிகள் செய்தார். எனது சிறுவயதிலிருந்தே நான் படிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டது அவர்தான். நான் புலமைப் பரிசில் சித்தியடைந்ததுக்கும் அவர்தான் காரணம்.

எனது தங்கை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, தற்போது 7ஆம் தரத்தில் படிக்கிறார். அவள் நல்ல கெட்டிக்காரியாக இருந்தபோதும் என்னுடைய பெறுபேறு வரும் வரையில் அவளது படிப்பிலும் வீழ்ச்சிநிலை காணப்பட்டது. அக்காவின் பெறுபேறு வந்தால் தான் நான் படிப்பேன் என்ற கூறுவாள். இப்போதுதான் மீண்டும் படிக்க ஆரம்பித்திருக்கிறார்.

எனது இலட்சியம் ஒரு விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே.



## பரமாநந்தன் ஜனனி
**பெறுபேறு: 2ஏபி (கொக்குவில் இந்துக் கல்லூரி)**

நான் எனது ஆரம்பக்கல்வியைக் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில்பயின்று, பின்பு கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் வர்த்தகத் துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோர் என்னைச் சிறந்த முறையில் வழிப்படுத்தினார்கள். பெற்றோரின் ஊக்குவிப்பும் நிறைவாக அமைந்தது.

வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் போன்றவற்றில் தேசிய மட்டம் வரை பங்குபற்றியுள்ளேன். விளையாட்டு என்பது ஒருநாளும் கல்விக்குத் தடையாக உள்ளது என்று யாருமே கருதக்கூடாது. அத்தகைய துறை மென்மேலும் கல்விக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

## ச.ஆருரன்
**பெறுபேறு: 2ஏபி (யாழ்ப்பாணக் கல்லூரி)**



எனது ஆரம்பக்கல்வியினை எனது சொந்த இடமான உசனில் அமைந்துள்ள உசன் இராமநாதன் ம.வியில் கற்றுத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். பின்னர் இடப்பெயர்வின் காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 6இல் சேர்ந்துகொண்டேன். எனது இலட்சியம் ஒரு பொறியியலாளர் ஆதல் என்பதால் உயர்தரத்தில் கணிதத்துறையைத் தெரிந்தேன். உயர்தரப் படிப்பிற்குத் தேவையான மேலதிக வகுப்புகளை எமது பாடசாலை அதிபர் ஒழுங்கு செய்ததால், என்னால் இலகுவாகக் கற்கக்கூடியதாக இருந்தது. மேலும் எனக்கு இவ்மேலதிக வகுப்புகள் போதுமாக இருந்ததால் தனியார் கல்வி நிலையங்களிற்கு நான் செல்லவில்லை. அத்துடன் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலுக்கமைய கற்பிக்கப்படும் பாடப்பரப்புகளில் தெளிவான விளக்கத்தைப் பெற்று, சுயமாகவே பல்வேறுபட்ட பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்து வந்தமையால் நல்ல தேர்ச்சியைப் பெறமுடிந்தது. சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு எனக்குத் தேவையான வசதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய எனது பெற்றோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் எனது பாடசாலை அதிபர் திரு.நோயல் விமலேந்திரன் அவர்களிற்கும் எனக்குக் கற்பித்த ஆரம்பக்கல்வி ஆசிரியர் தொடக்கம் சகல ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் என்னைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவந்த எல்லாம் வல்ல இறைவனிற்கு நன்றி செலுத்துவதுடன், எதிர்காலத்தில் நான் ஒரு சிறந்த கணனிப் பொறியியலாளராக வரவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.



## துவாரகை மதனகோபாலசாமி
**பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**

நான் தரம் 1-5வரை கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுப் பின்னர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி கற்றேன். ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலைத்துறையில் 2ஏபி சித்தியினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 35ஆவது நிலையினை அடைந்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு எனக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த எனது பெற்றோர்களும், சகோதரர்களும் மற்றும் நண்பர்கள், ஆசிரியத் தெய்வங்களும் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். எமது பாடசாலையின் ஆசிரியர்கள் என்னைச் சிறப்பாக வழிநடத்தி எமது கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருந்தனர். பரீட்சையினை எதிர்கொள்ளக்கூடிய உத்தியையும், மனத்தைரியத்தையும் ஏற்படுத்திப் பரீட்சையை நான் சிறப்பாக எதிர்கொள்வதற்கு வழிகாட்டியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கல்வியில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எமக்குப் பல வழிகளில் ஊக்குவித்த ஆசான்களிற்கும், தனியார் கல்வி நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

எமது குடும்பம் மிகவும் சாதாரண தரத்தைச் சேர்ந்தது. நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில் ஒருவருமே பல்கலைக்கழகம் செல்லவில்லையே என்ற மனக்கவலையுடன் இருந்த எனது பெற்றோர்களின் கவலையைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்கில் நான் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற நோக்குடனும் எனது சகோதரர்களின் ஊக்குவிப்புடனும், எனது மாமாவின் புத்திமதியும், உயர்கல்வி பற்றிய வழிகாட்டலுடனும், மிகுந்த விடாமுயற்சியுடன் கற்று உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றேன்.

**சந்திப்பும், படங்களும்: ஒளண்யன், குமரன், கணேசமூர்த்தி. 24**

## மயூரி மகேந்திரன்
**பெறுபேறு: 2ஏபி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை)**



எனது கல்விக்கு ஆரம்பத்தில் இருந்து அடித்தளமிட்டுத் தந்த அனைவருக்கும் நன்றியுடையேனாவேன்.

உயர்தரத்தில் எனது விருப்பின் பேரில் கலைப் பிரிவைத் தெரிவுசெய்து அதில் தமிழ், அரசறிவியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்றேன். மூன்று பாடங்களுக்கும் சமஅளவு முக்கியத்துவத்தைக் கொடுத்துப் படித்தேன். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் தரும் ஊக்கத்துடன் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடன் படித்தேன்.

பொதுவாகவே அதிகாலையில் எழுந்து கற்பது மனதிலே பதிந்தது. அதுமட்டுமன்றி இரவில் படித்துவிட்டு நித்திரைக்குச் செல்லும்போது படித்ததை மீட்டுப் பார்ப்பேன்.

பாடசாலைக் கல்வி மட்டுமன்றி நூல் நிலையங்களை நாடிச் சென்று பத்திரிகைகளையும், நூல்களையும் படித்து நல்ல தகவல்கள் பெறுவதோடு ஆசிரியர்கள் தரும் நூல்களையும் படிப்பேன். அத்தோடு பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவியாகவும், சாரணியாகவும் விளங்கியதோடு பல போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்றேன்.

பரீட்சைக்கு முன்னரான காலத்தில் கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்து போராடிக் கிடைத்த வெற்றிக்குக் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்.



## துரைராசா வினோத்
**பெறுபேறு: 2ஏபி (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)**

நான் தரம் 1- 11 வரை கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று உயர்தரத்திற்காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இணைந்து கலைப்பிரிவைத் தெரிவு செய்தேன். அளவையியல், இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன். இந்தப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களான ஆ.பிரபாணந்தன், ப.ஜோதீஸ்வரன், சு.முரளிதரன், கி.நடராஜா போன்ற ஆசிரியர்கள் தமது பாடங்களைச் செவ்வனே கற்பித்துக் கொடுத்தனர். எங்கள் பாடசாலை அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் தமது அறிவுரைகளை வழங்கி ஊக்குவித்து இருந்தனர். மற்றும் எனது கல்விக்குப் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோர் மேலும் ஊக்குவிப்பை தந்தனர். மற்றும் தனியார் கல்வி நிறுவனமும் எனது கல்விக்கு வழிகாட்டியாக அமைந்ததனால் என்னால் இப்பெறுபேற்றினைப் பெறமுடிந்தது.

## உமா உதயகுமாரன்
**பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**



நான் தரம் 1-6 வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். தரம் 7 இல் இருந்து உயர்தரம் வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றேன். தமிழ், அளவையியல், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களையும் தெரிவுசெய்தேன். நான் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோர் மிகுந்த பங்களிப்பை வழங்கினார்கள். பாடத்தில் எந்தச் சந்தேகம் வந்தாலும் உடனே அதை நிவர்த்தி செய்தார்கள். பாடசாலைச் சமூகமும் எனக்கு உறுதுணையாக இருந்தது.

அன்றாடம் படித்ததை உடனே வீட்டிற்கு வந்து மீட்டுப் பார்த்தமையும் சிறந்த பெறுபேற்றை எடுப்பதற்கு உதவியாக இருந்தது. எனது கல்வி முயற்சிக்கு எனது குடும்பம் மிகவும் தூண்டுதலாக இருந்தது. நான் இரவு படித்து முடிக்க 12 மணி, ஒரு மணி சென்றாலும் எனது தாயார் அவ்வளவு நேரமும் நித்திரை செய்யாது என் கூடவே இருப்பார்.

மேலும் எனது அண்ணா ஒரு ஆசிரியராக இருப்பதால் எனக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டார். எனது தந்தையின் ஒரே இலட்சியம் நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாக வேண்டும் என்பதுதான். ஆனால் என்னுடைய தந்தை இப்போது உயிரோடு இல்லை. ஆனாலும் நான் எனது தந்தையின் இலட்சியத்திற்காகவே கடுமையாகவும், விடாமுயற்சியோடும் கல்வி கற்று என் தந்தையின் ஆசையை நிறைவேற்றியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






தரம் -05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான

# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

**வினாத்தாள் - 1** **நேரம் : 45 நிமிடங்கள்**

★ **தரப்படும் உருக்களை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவின் கீழ்க்கோடிடுக.**

1.


2.


★ **சொற்கள் ஆக்கப்பட்டுள்ள விதத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டியசொல்லை எழுதுக.**

03. காரம் + பணம் ⇒ காரணம்
அருமை + தவம் ⇒ ..............................

04. திருமதி + வலம் ⇒ வருமதி
பருவம் + உதவி ⇒ ..............................

★ **மிக நெருங்கிய தொடர்புடைய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

05. A - மீன் B - சிறுமி C - மான் D - பழம் E - புத்தகம்

1) A, B 2) B, C 3) C, D 4) B, E

06. A - மாளிகை B - பழம் C - காய் D - மரம் E - வீடு

1) A, E 2) A, C 3) B, E 4) A, D

★ **தரப்படும் கூற்றுக்கள் ஒன்றுடன் ஒன்று சீரான தொடர்பினைக் கொண்டிருப்பின் (சரி)எனவும்,இல்லைஎனின்(பிழை)எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

07. * சிம்தா நன்றாகப் பாடுவாள்.
* அவள் என்னிடம் பாடிக்காட்டினாள்.
* நான் அவளைப் பாராட்டினேன். ( )

08. * இஜாஸ் தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட்டான்.
* போட்டியில் கலந்து முதலிடம் பெற்றான்.
* அவனுக்கு பதக்கம் கிடைத்தது. ( )

09. * வீட்டிலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது.
* வீட்டுக்கு வருமாறு தந்தை என்னைக் கேட்டுள்ளார்.
* அவர் பொதுவாக என்னுடன் தொலைபேசியில் பேசுவார். ( )

★ **நிரலை அவதானித்து சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

10. புருவம், அருவம், உருவம் என்ற சொல் நிறையுடன் சேர்க்கப்படக்கூடிய ஒரு சொல்,

★ **பின்வரும் கூற்றுக்கள் ஏன் பிழை என்பதற்கான விடையின் கீழக்கோடிடுக.**

11. நான் சுற்றுலாச் சென்றபோது இலங்கையின் முதலாவது தலைநகரான பொலனறுவைக்கும் சென்றேன் என ரதி கூறினாள்.
1) அவள் பொலனறுவை செல்லவில்லை.
2) முதலாவது தலைநகரம் அநுராதபுரமாகையால்.
3) அவளுக்கு ஞாபக மறதி என்பதால்.

12. தரம் - 5 புலமைப்பரிசிற் பரீட்சைக்கு தரம் - 5இல் கற்கும் அனைவரும் தோற்ற முடியும்.
1) இப்பரீட்சை அவர்களுக்கானதாகையால்.
2) அது அரசாங்கத்தின் விதிமுறை என்பதால்.
3) குறிப்பிட்ட வயதினரே அப்பரீட்சைக்கு தோற்ற முடியும் என்பதால்.

**மாணவர்களே! கடுமையான தொடர் பரீட்சைகளுக்குப் பயிற்சி பெறத் தயாராகுங்கள்!!!**
**"பயிற்சி உயர்ச்சி தரும்"**

★ **பெட்டிக்குள் இருக்கும் எண்ணுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய எண்களைக்கொண்ட விடையின் கீழ்க்கோடிடுக.**

13. 10 + (4 x 6) = 34

1) (6 x 3) 2) (34 - 10) 3) (12 ÷ 2)

14. 23 + (10 x 0) = 23

1) (23 + 10) 2) (10 + 13 + 1) 3) (79 - 79)

* **பாடலை நன்கு அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

மழைக்காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வரவேண்டும்
வெள்ளத்தில் கல்லெறிந்து

......................................
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்.

15. இடைவெளிக்குப் பொருத்தமான வசனத்தை எழுதுக.

..............................................................................

16. விலகி என்பதன் எதிர்க்கருத்து சொல்.

..............................................................................

★ **பின்வரும் எண் தொடர்பை அவதானித்து மிகச் சரியான விடையை கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

17.
17 5 12
18 5 13
16 3 .......


18.
3 0 0
9 8 72
14 0 .......

★ **உருவைக்கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

19. இங்கு பெறக்கூடிய செவ்வகங்கள் எத்தனை?
1) 3 2) 4
3) 5 4) 6



20. இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1) 9 2) 13
3) 14 4) 15



★ **முதலில் தரப்படும் கூற்றுக்களை உண்மை என ஏற்றுக்கொண்டால் அதனை அடுத்து வரும் 3 கூற்றுக்களுள் ஒன்று உண்மையாயிருக்கும். அதன் கீழ்க் கோடிடுக.**

21. மீன்களில் சில குட்டியீனுவன. சுறாமீன் குட்டியீனும், ஆகவே,
1) மீன்களிற் சில முட்டையிடுவன.
2) சுறா மட்டுமே குட்டியீனும்.
3) பல மீன்கள் முட்டையிடுகின்றன.

22. சிம்றா பெரும்பாலும் தைத்துக்கொண்டே இருப்பான். ஆகவே,
1) சிம்றா சிலவேளை தைக்காமலிருப்பான்.
2) சிம்றா முழு நேரமும் தைத்துக்கொண்டே இருப்பான்.
3) சிலவேளை சிம்றா தைத்துக்கொண்டிருப்பான்.

★ **மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

23. மு.ப 6.55 க்கு வரவேண்டிய பேருந்து 10 நிமிடம் தாமதித்து வருவதாக அறிவிக்கப்பட்டது எனின், அது வந்தடையும் நேரம்,
1) மு.ப 6.65 மணி. 2) மு.ப 7.50 மணி. 3) மு.ப 7.05 மணி.

24. இந்நேரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது காட்டும் நேரம்,
1) 12.00 மணி. 2) 3 மணி 60 நிமிடம். 3) 9.00 மணி

★ **மிகச்சரியான விடையின் இலக்கத்தை சுற்றி வட்டமிடுக.**

25. பஸ்லியா பாடசாலை செல்லும்போது அவளது நிழல் அவளின் இடது கைப்பக்கம் விழுந்தது எனின், அவளின் பாடசாலை அமைந்திருப்பது,
1) வடக்கில். 2) கிழக்கில். 3) தெற்கில்.

26. சஸ்னியும், சஸ்னாவும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் இருந்தனர். சஸ்னியின் முகம் வடக்கு நோக்கி சஸ்னாவைப் பார்த்திருந்தால் சஸ்னாவின் வலது கைப்பக்கம் காட்டும் திசை எது?
1) கிழக்கு. 2) மேற்கு. 3) தெற்கு.

27. சந்தை என்பது,
1) விற்போரும், வாங்குவோரும் சந்திக்கும் இடம்.
2) பொருட்களை நிறுக்கும் இடம்.
3) விற்பனையாளன் பொருட்களை விற்கும் இடம்.

28. ஏற்றுமதி என்பது,
1) பொருட்களை வாங்கி விற்கும் செயற்பாடு.
2) பொருட்களை கப்பலில் அனுப்பும் செயற்பாடு.
3) பொருட்களை விற்கும் செயற்பாடு.


## அன்பு மாணவர்களே!

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன் வினாத்தாள் - II எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

29.



30.



★ தரப்படும் சொற்களை கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

31. 1 - எல்லோரினதும். 2 - சுற்றாடலை. 3 - கடமையாக உள்ளது.
4 - எங்கள். 5 - பேணிப் பாதுகாப்பது.
1) 25143 2) 25413 3) 21543

32. 1 - உண்பதற்கு. 2 - உள்ளனர். 3 - பழங்கள்.
4 - விருப்பமுள்ளவர்களாக. 5 - பிள்ளைகள்.
1) 51342 2) 53412 3) 53142

★ பின்வரும் எண்களை ஏறுவரிசையில் பிழையின்றி எழுதப்பட்டுள்ள விடையின் கீழ்க்கோடிடுக.

33.

| P | 60606 |
|---|---|
| Q | 66006 |
| R | 66600 |
| S | 60066 |

1) RQSP 2) RSQP 3) SPQR 4) RQPS

34. A - (xx + III) B - (L + VI) C - (VIII + IX) D = (L - XX)
1) .BDAC 2)BDCA 3) CADB 4) CABD


35. மலர் எனும் சொல்லுடன் இணைந்து வராத சொல்,
1) சிறிய. 2) கெட்டித்தனமான. 3) அழகான.

36. சிறுமி எனும் சொல்லுடன் இணைந்து வராதது,
1) கர்வம் பிடித்த. 2) கெட்டித்தனமான. 3) வயோதிப.

37. சிம்தானை விட சறோஸ் வேகமாக ஓடிய போதிலும் இஜாஸை விட பின்னாலே ஓடினான் இவர்களில் மிக வேகமாக ஓடியவர்கள் யார்?
1) சிம்தான். 2) சறோஸ். 3) இஜாஸ்.

38. ஒரு தோட்டத்தில் மா, பலா, வாழை என மரக்கன்றுகள் ஒழுங்கு முறையில் நடப்பட்டிருந்தன எனின், 38ஆவதாக காணப் படும் கன்று எது?
1) மா. 2) பலா. 3) வாழை

39. ரவியின் தாய் கமலா, சுனிலின் மனைவி கமலா, சித்திராவின் அண்ணன் ரவி அதன்படி சுனில் சித்ராவுக்கு யார்?
1) தம்பி. 2) தந்தை. 3) மகன்.

40.  இங்கு நிறந் தீட்டப்பட்டது முழு உருவின் பின்னமாக சரியாகக் காட்டப்பட்ட விடை,
1) 0.4 2) 0.8 3) 0.5

ஆக்கம்:- திரு.சண் சுதர்சன்,
கண்டி.

## கடந்த 19.02.2009 இல் வெளிவந்த வினாத்தாள் 2 இற்கான விடைக்குறிப்புக்கள்

01. 01 - வட்ட நிலா/ நிலா .02 - வானம். 03 - விண்மீன்கள். 04 - பட்டுப்போன்ற மேனியுடன்/ பட்டுப்போன்ற மேனி.
05 - உலா வருகிறது. 06 - அம்புலி, மதி, திங்கள், சந்திரன். 07 - பௌர்ணமி.
08 - பூமி. 09 - வட்ட.
02. 01 - சிம்தானா கடைக்குச்சென்று பால், முட்டை, சீனி, மா, பருப்பு என்பன வாங்கினாள்.
02 - எமது நாட்டின் தலைவர் யார்?
03. 01 - நித்திரை செய்தல். 02 - இரக்கப்படல்/ மனமிரங்கல்.
04. 01 - பல்கலைக்கழகம். 02 - தலைவலி.
05. 01 - திக்கற்றவனுக்கு தெய்வமே துணை. 02 - பேராசை பெரு நட்டம்.
06. 01 - சரி. 02 - பிழை. 03 - பிழை. 04 - சரி. 05 - சரி.
07 - 01.1 02. 4 03.3 04.2 05. 2 06. 1 07. 1
08. 2 09. 3 10. 1
08. 01 - 40000 km 02 - 36cm 03 - 22 04 -12 05 - 252
06 - 20, 012 07 - 6 08 - 3/4 09 - 1/8 10 - 600
09. 01 - 3 ஆவது. 02 - 4 ஆவது. 03 - 58 04 - 2 05 - 4 ஆவது.
10. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 071-6850005 / 071-4273035



சித்தங்கேணி ஶ்ரீகணேச வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய் வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா, தரம் 9 மாணவன் இ.சிந்துஜனுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதைக் காணலாம்.



கோப்பாய் தெற்கு றோ.க.த. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய் வன்மைப் போட்டி நிகழ்வின்போது வெற்றிபெற்ற சில வீரர்கள், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், பாடசாலை அதிபர் ச.லலீசன், சங்கமம் சிறுவர் நல னோம்பு நிறுவன இயக்குநர் அருட்சகோதரர் ஜோய் அமிர்தராஜ் ஆகியோருடன் காணப் படுகின்றனர்.



நவாலி மகாவித்தியாலயத்தில் கால்கோள் விழா பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திருமதி ரூபா உதயரட்ணத்தை திருமதி வி.கோகுலானந்தம் மாலை அணிவித்து வரவேற்பதனையும்–

உப அதிபர் திருமதி ஜெ.குமரேசமூர்த்தி, சிரேஷ்ட ஆசிரியர் [illegible] கல்வி பாடசாலை இணைப்பாளர் திருமதி ப.தேவமனோகரன் ஆகியோர் அருகில் இருப்ப தையும் படத்தில் காணலாம்.

(95)



[illegible]டை றோ.க.த.க.பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டியின் [illegible]நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களின் உடற்பயிற்சிக் காட்சியைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், பெப்.26

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் 2008ஆம் ஆண்டு நடத்திய பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பாடரீதியாக முதல் 25 மாணவர்களின் விவரம் வருமாறு:

**கணிதம் - 2009**

தரம் - 13 - ஏ.யோன்நிராஜ் (ஹாட்லி), இ.முரளிதரன் (மகாஜனா), ஜே.லடேஸ் லொய்யாஸ் (சென்.பற்றிக்ஸ்), த.எழில்வேந்தன் (யாழ். இந்து), எஸ்.தமய்ந்தி (கொக்குவில் இந்து), எஸ். பிரசாந் (ஹாட்லி), எஸ்.ராகுலன் (ஹாட்லி), ரி.ஜெயந்தன் (ஹாட்லி), ஆ.கஜந்தன் (சென்.ஜோன்ஸ்), எஸ்.தனஞ்சயன் (ஹாட்லி).

யு.சாந்திக்கா (நெல்லியடி ம.வி), ப.பிரகாஸ் (விக்டோறியா), பே.பிருந்தன் (யாழ்.இந்து), ம.ராகவன் (யாழ்.இந்து), எஸ்.சிந்துஜன் (கொக்குவில் இந்து), எம்.அன்ரனிகிளைன் (சென்.பற்றிக்ஸ்), எல்.நரேஸ்குமார் (கொக்குவில் இந்து), ஜெ.பிரகதீஸ் (ஹாட்லி), எம்.சபேசன் (கொக்குவில் இந்து), அ.புருசோத்தமன் (யாழ். இந்து).

எஸ்.கோகுல் (ஹாட்லி), கே.அபிராம் (கொக்குவில் இந்து), ஆர்.கஜதர்சன் (கொக்குவில் இந்து), ஜி.தர்சன் (ஹாட்லி), ஆ.ஜெசுரன் (சென்.ஜோன்ஸ்).

**உயிரியல் - 2009**

தரம் - 13 - ஏ.எஸ்.பிரசாந் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.யதுகுலன் (யாழ்.இந்து), எஸ்.ரகுவரன் (நெல்லியடி ம.வி), ரி.சுதாசினி (யாழ்.இந்து மகளிர்), கே.லாவண்யா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர்.ரூபினி (யாழ்.இந்து மகளிர்), கே.நிரோஜி (உடுப்பிட்டி மகளிர்), எஸ்.சரண்ணியா (வேம்படி மகளிர்), கே.உமாசுதன்(ஹாட்லி), ஜே.ஜோன்செல்ரன்(யாழ்.சென்.பற்றிக்ஸ்), ரி.துஸ்யந்தன் (யாழ். இந்து), எஸ்.சிவரஞ்சன் (யாழ். இந்து) ஏ.அகிலன்( யாழ்.இந்து), ஜி.சுதர்சன் (யாழ். இந்து), எஸ்.குயிந்தன் (கொக்குவில் இந்து) எம்.நிரோசன் (யாழ். இந்து), ரீ.சஞ்சயன்(யாழ்.இந்து), வி.சிந்துயன் (சென் ஜோன்ஸ்), ரீ.பார்த்தீபன் (கொக்குவில் இந்து), பீ.கார்த்தீபன் (சென் ஜோன்ஸ்) பி.குகநாத் (யாழ். இந்து), பீ.கபிலேசன் (யாழ்.இந்து), கே.அரசிளங்குமரன்(சென் ஜோன்ஸ்), கே.முரளி (யாழ். இந்து), வீ.சுயந்தன் (சென் ஜோன்ஸ்).

**கணிதப்பிரிவு**

தரம் -12 (2010) ரீ.பிரணவன் (ஹாட்லி), எஸ்.யசோதரன் (சாவகச்சேரி இந்து), எஸ்.சுமங்கலி (வேம்படி), ஜே. ஸ்ரீகுமார்(ஹாட்லி), எஸ்.ஜெயராம் (ஹாட்லி), எஸ்.கௌசல்யன்(சென் ஜோன்ஸ்), பி. தர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.ரஜீபவன் (ஹாட்லி), எஸ்.சிவராம் (ஹாட்லி), ஏ.ஹரிகாலன் (ஹட்லி), ந. திருத்தணிகன் (யாழ். இந்து), மு.பிருந்தாவன்(யாழ்.இந்து), கே. உபமன்யு (சென் ஜோன்ஸ்), ரீ.உதயபவன்(கொக்குவில் இந்து ), எஸ். வசந் (கொக்குவில் இந்து), எஸ்.அருளினி (நெல்லியடிம.வி.), பீ. ஜெனோத் (சாவகச்சேரி இந்து), அ.பஜிரன் (யாழ். இந்து), இ. ஸ்ரீசியாமளன்(யாழ். இந்து), எஸ். சிந்துயா (நெல்லியடி ம.வி),ஜே.கோபிநாத் (யாழ். இந்து), செ.நிரோசன் (யாழ். இந்து), ஏ. வை. அனற் நிசாந்தா(வேம்படி), அ.சசிந்தன் (யாழ். இந்து), டீ.ஜெனிவர்( யாழ்ப்பாணக் கல்லூரி),

**உயிரியல்பிரிவு**

தரம் - 12 (2010) பி.கோகுலன் (ஹாட்லி), ஏ.நிதர்சன் (கரவெட்டி விக்கினேஸ்வரா), எஸ்.கயனன்(கொக்குவில் இந்து), எஸ்.விசாகன்(சாவகச்சேரி இந்து), எம்.பார்த்தீபன் (ஹாட்லி), ஏ.விதுரன்(ஹாட்லி), ஏ.பகீரதி (வேம்படி), ஏ.சுபாங்கி(வேம்படி), பி. துஸ்யந்தன்(சென் ஜோன்ஸ்), ஆர். ஹம்சத்வனி(வேம்படி), வி.அரவிந்தன் (நெல்லியடி ம.வி ), வை.சரண்ஜா (சுண்டுக்குளி மகளிர் ), வி. நிசாந்திகா(வேம்படி), எஸ்.யசோதரா (வேம்படி), ஆர்.மாதங்கி (சாவகச்சேரி இந்து), எஸ்.றுக்சிகா(வேம்படி), ஜே. யூலிட்ஸ் கெலினா(சுண்டுக்குளி மகளிர்), பி.துவாரகா (வேம்படி), பி.விஸ்ணுகாந் (கொக்குவில் இந்து), பி.சுஜீவன்(சென் ஜோன்ஸ்), க. கோபிகா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), வி. ஜீவேந்திரன்(கொக்குவில் இந்து), ஏ.ஜனித்திரி (வேம்படி), ஏ.கோகுலரூபன் (கொக்குவில் இந்து), ஜி. தட்சாயினி (வேம்படி மகளிர்),

**வர்த்தகப்பிரிவு**

தரம்-12 (2010) பி.ராஜாராம் (ஹாட்லி), வை. சரணியா (இந்து மகளிர்), ஏ.அகல்யா (வடமராட்சி மத்திய மகளிர்), கே.அனித்தா (ஞானாசாரியர்), ரி.மயூரி (இந்து மகளிர்), ஏ.கோகுலன் (நெல்லியடி ம.வி), எஸ். பவித்தா (நெல்லியடி ம.வி), ஆர். பவித்திரா (இந்து மகளிர்), எஸ். கயல்விழி (விக்டோரியா), ந. மெரிசெலஸ்ரீனா (விக்டோரியா),யீ. மாலினி (வட இந்து மகளிர்), ரி.தனசாந்தி (உடுப்பிட்டி மகளிர்), எம்.லக்ஸ்ரலா (வேம்படி மகளிர்), ரி.மதனிகா (சுண்டுக்குளி மகளிர்), வி. தர்சிகன் (ஹட்லி), கே.சுயாதா (கொக்குவில் இந்து), எஸ். நிரோஜினி (வல்வை மகளிர்), ரி.கிரிசிகா (இந்து மகளிர்), எஸ். கிரிதரன் (கொக்குவில் இந்து), எம்.பிரியங்கா (உடுப்பிட்டி மகளிர்), ஆர். ஜீவகி (இந்து மகளிர்), என். டிலொக்சி (கொக்குவில் இந்து), ரி.சசிரூபன் (கொக்குவில் இந்து), ஜி.சுபநாதன் (ஹட்லி), ஆர். தர்சினி (இளவாலை கன்னியர் மடம் ம. வி).

**வர்த்தகப்பிரிவு**

தரம் - 13 (2009) ரி.சோபிதா (உடுப்பிட்டி மகளிர்), எஸ். சிவகாமி (உடுப்பிட்டி மகளிர்), வி.அர்ச்சனா (உடுப்பிட்டி மகளிர்), கே.சக்த்திநாயகி (சுண்டிக்குளி மகளிர்), எஸ்.வாகினி (உடுப்பிட்டி மகளிர்), ஆர். வருணன் (ஹட்லிக்), என்.லக்ஷனா (யூனியன் ), பி.சியாமா (வேம்படி மகளிர்), சு. சபினா (கனகரத்தினம் ம.வி), ஏ.அன்ரனி ஜோன்சன் (ஹட்லி), வி.பிரியங்கா (வட இந்து ம.வி), து.விசுவராஜ் (விக்ரேரியா), எஸ்.துவாரகா (வட இந்துமகளிர்), எஸ். கவிதா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), எஸ் சோபிகா (இந்து மகளிர்), எஸ்.தேவகி (சண்டிலிப்பாய் இந்து), த.தாட்சாயினி (இடைக்காடு ம.வி.), எஸ்.சயந்தன் (கரவெட்டி விக்கினேஸ்வரா), ஜெ.லேகா (இந்து மகளிர்), என். கீத்திகா (யூனியன்), ஏ. அஜிதா (உடுப்பிட்டி மகளிர்), ஆர்.ஜீவிதா (உடுப்பிட்டி மகளிர் ), ச.ஐஸ்வர்யா (வேம்படி மகளிர்), கே. பிரசன்னா (யூனியன்), ஏ. வானுஜி (இந்து மகளிர்).

## அறுவடை செய்யப்பட்டுள்ள புதிய நெல் விற்பனையில்

தொல்புரம், பெப்.26

சுழிபுரம் பிரதேசத்தில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட 70 கிலோ நெல் மூடை ஒன்று நாலாயிரம் ரூபா தொடக்கம் நாலாயிரத்து ஐந்நூறு ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் அறுவடை செய்யப்பட்ட பெரிய வெள்ளை நெல்மூடை ஒன்று 5 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 6 ஆயிரம் ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

மேற்படி நெல் மக்கள் மத்தியில் அதிகமாக விரும்பிக் கொள்வனவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒரு பரப்பு வைக்கோலின் விலை 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

நெல் அறுவடை செய்வதற்கு பரப்பு ஒன்றுக்கு கூலியாக 350 ரூபா வரையில் சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (203-119)

## பாம்பினால் கடியுண்டார் விவசாயி

தென்மராட்சி, பெப்.26

அதிகாலை வேளையில் தோட்டத்திற்குச் சென்ற விவசாயி பாம்பினால் கடியுண்டார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை அல்லாரை வடக்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேணுகோபால் ரவிகரன் (வயது-35) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)


**நாய்க் குட்டி விற்பனைக்கு**

2 மாதம் நிறைந்த வெள்ளையும் கறுப்பும் கலந்தது (நீண்ட காதுகளை உடையதும் பொமனேரியன் போன்ற சடையும் கொண்டதுமான) கொக்கஸ் பனியர் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 112, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0774 598132, 0777 033980

**யாழ்.பொருளியல் கல்லூரி**

**கிறிஸ்தவம்**

ஆசிரியர்: S.K.Sutharsan

2011-A/L புதிய பிரிவுகள் 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

நேரம்: 01.00- 02.00 pm.

(இ/557368)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 12 . 09 . 1938 — மறைவு 27 . 01 . 2009



**திருமதி பூதத்தம்பி சரஸ்வதி**

(26.02.2009)

என்றும் எம்முடன் இனிமையாய் வாழ்ந்து
விரைவில் விண்ணிற்கு ஏகிய எம் தாயே!
மண் உள்ளவரை உனை மறவோம்.

கடந்த (27.01.2009) அன்று இறைவனடி சேர்ந்த எம் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (82998) பூதத்தம்பி குடும்பத்தினர்,கண்ணன்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்

மலர்வு 14 . 11 . 1941 — உதிர்வு 19 . 02 . 2007



**அமரர் சிவசம்பு மனோகரசீலன்**

(உரிமையாளர்- சுரேக்கா ரேக்ஸ், முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர்- மானிப்பாய்)

திதி: 26.02.2009

அன்பின் இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் நிறைகுடமாய் எம் எல்லோரையும் வாழ வைத்த
எம் குலவிளக்கே! இரண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் எம் உள்ளக் கோயிலில்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய். (82953) குடும்பத்தினர்.

## பவள விழா வாழ்த்துக்கள்



**சண்முகம் சிவதாசன்**

(ஓய்வுபெற்ற உப தபாலதிபர் - தெல்லிப்பழை மேற்கு)

26.02.2009

தலை மகனாய்ப் பிறந்தீர் அண்ணா!
தனி மரமாய் நின்றீர் இன்று
இருமுறை மலர்ந்தும் வசந்தம்
இன்று நீர் தனிமை தானோ!

மீதி நாள் வாழ்வை மண்ணில்
சோதனை ஏதுமின்றி சுகநலத்துடனே வாழ
ஆதியாம் இறைவன் மாட்டு
ஆசியை வேண்டுகின்றோம்.

மனைவியின் ஆண்டுத்
திவசம் மனநிறை ஆக்கிர மிக்க
பவளமாய் எழுபத்தைந்து
பரிவுடன் எதிர் கொண்டீரே!


குகதாசன் - தேவிகுடும்பம்
திருமதி கிருபாசக்தி தர்மதாசன்,
ஜெயதாசன் - சுலோஜனா குடும்பம்,
விஜயகுமார் - மீரா குடும்பம் (ஆஸ்திரேலியா),
முகுந்தன் - தபோதினி குடும்பம் (வவுனியா).

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(82999)

## இதயம் மறவா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 . 08 . 1926 — உதிர்வு 01 . 03 . 2006



**அமரர் முத்தையா இராசரத்தினம் (பத்தர்)**

திதி:பூர்வபட்ச துதியை (26.02.2009 வியாழக்கிழமை)

அன்புடனும் பாசத்துடனும் எங்களை வளர்த்த அப்பாவே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே! எங்கு சென்றீர் எம்மை விட்டு
இனி என்று காண்போம் உங்கள் திருமுகத்தை
நீங்கள் மறைந்தாலும் உங்கள் திருமுக
நினைவுகள் ஒரு போதும் எம்மை விட்டு நீங்காது
ஆயிரம் உறவுகள் வந்தாலும் அப்பா உங்களுக்கு நிகராகுமா?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
இல.43ஏ, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
"மலர்வாசம்" மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (83007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990 தொடக்கம் 1996 வரையான காலப்பகுதிகளில் பிறந்தோரின் பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம்,பெப்.26

1990ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் பிறந்தோர் தமது அவசர தேவைகளுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதில் சிரமமடைந்து வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.நகர் மேற்கு பிரசவ சிகிச்சை நிலையம் ஆகியவற்றில் பிறந்தோரே இவ்வாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனினும், விநியோகிக்கப்படும் பிரதிகள் தெளிவற்றவையாகவும் பெயர்கள் தவறாக உள்ளனவாகவும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் அடையாள அட்டை பெறுதல் மற்றும் அவசர தேவைகளுக்கு இவற்றைச் சமர்ப்பிக்கமுடியாத நிலை உள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் - இக்காலப் பகுதிக்குள் பிறந்தோர் யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் சென்று பிறப்புப் பதிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-224)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற எட்டுப் பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,பெப்.26

கொடிகாமம், கச்சாய் வீதி, பாலாவி வடக்கு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற எட்டுப் பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்று விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரும் இலங்கை மின்சார சபை சாவகச்சேரி கிளையினரும் இணைந்து கடந்த திங்கட்கிழமை நடத்திய திடீர் பரிசோதனையின்போது இவர்கள் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த எட்டுப் பேரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 3ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-207)




யாழ்ப்பாணம்,பெப்.26

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளில் முதன்மை விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திருமதி கு. ஆறுமுகம், தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் க.சிவகோசரியார், சாவகச்சேரி மக்கள் வங்கி உதவி முகாமையாளர் கே.சிறிதரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (203-207)

★ ★ ★

வடமராட்சி,பெப்.26

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் உதவி முகாமையாளர் ச.சிவகுமாரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி த.தவேந்திரராஜா, குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியகத்தின் அருட்தந்தை பிரேமன்ராஜன் றோகான், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் த.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். (203-236)

# ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிக் கழகத்தின் ஒன்றுகூடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொள்வார்.

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவித்தல், சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட லொறியின் வெள்ளோட்டம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# வேலணையில் மூலிகைத்தோட்டம் அமைத்து அவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.26

வேலணையில் மூலிகைத் தோட்டம் அமைத்து, அழிந்துவரும் மூலிகைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் ஆயுள்வேத வைத்திய சேவையை விஸ்தரிப்புச் செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வேலணைப் பிரதேச சபைச் செயலர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்ட தீர்மானம் தொடர்பாகச் சபைச் செயலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் டாக்டர் க. செல்வநாதன், டாக்டர் எஸ்.சிவகௌரி, டாக்டர் ஜெ.இரத்தினலஜி ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இதில் தீவகப் பகுதியில் ஆயுள்வேத வைத்திய சேவையை அறிமுகம் செய்தல், ஆயுள்வேத வைத்திய சேவையின் சாதக, பாதக நிலைமைகளை ஆராய்தல், எதிர்காலத்தில் ஆயுள்வேத வைத்திய சேவையை கிராமிய மட்டத்தில் சிறப்பாக முன்னெடுத்து விஸ்தரித்தல் பற்றி ஆராய்தல், ஆயுள்வேத வைத்திய சேவை தொடர்பாகப் பங்குபற்றுநர்களின் கருத்துக்களை ஆராய்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. (203-95)




சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் 15ஆவது சிரார்த்த தின நினைவுப் பேருரை கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையுரையாற்றுவதையும் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி, பிரதி அதிபர் சி.மகேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் நினைவுப் பேருரை நிகழ்த்த வருகைதந்த யாழ்.பல்கலைக் கழக பௌதிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பு.ரவிராஜன் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: எஸ்.கதிரவேலு)

# றோட்டரி ஏற்பாட்டில் ஊடகத்துறை செயற்பாடு குறித்த விரிவுரை இன்று

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் "மோதல்கள் நடைபெறும் பகுதியில் ஊடகத்துறையின் செயற்பாடுகள்" என்னும் தலைப்பில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை உதயன் கேட்போர் கூடத்தில் விரிவுரை இடம்பெறவுள்ளது.

இந்த விரிவுரையை யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய ஆலோசகரும், சர்வதேச ஊடகத்துறை வல்லுநருமான கலாநிதி ஹென்றிக் குறாநெற் நிகழ்த்துவார். சகல றோட்டரி, றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள் மற்றும் மேற்படி விடயத்தில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)


# குடாநாட்டில் வீதி புனரமைப்புக்குத் தேவையான 'றோலர்'கள், தார் பரல்கள் எடுத்துவரப்படவுள்ளன

## வீதி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கென வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மூன்று 'றோலர்' வாகனங்கள் மற்றும் தார் பரல்கள் என்பன எடுத்துவரப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன.




தார் பரல்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையினால் குடாநாட்டில் பிரதான நெடுஞ்சாலை வீதிகளை முழுமையாகப் புனர்நிர்மாணம் செய்யமுடியாது வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் சிரமப்பட்டு வருகின்றனர்.

தற்போது கையிருப்பில் இருக்கும் குறைந்த பட்சத் தார் பரல்களைக் கொண்டு அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதான வீதிகளில் ஏற்பட்ட சேதங்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

அதுவும் இந்தத் திருத்தப் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப் போதிய தார் இன்மையால் அதன் கலவையைக் கொண்டே சிறுகுழிகள் மற்றும் பாதிப்புகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அதனை விட முழுமையான வீதி புனரமைப்புப் பணிக்கு 'றோலர்' வாகன வசதி இல்லை.

இதனால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் சிரமப்பட்டு வருகின்றனர். தற்போது இவற்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று மேலும் கூறப்பட்டது. (203-224)

# யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு கோயில் வீதியில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கென நிரந்தர மாடிக் கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.கோயில் வீதியில் இக்கட்டடம் அமைப்பதற்குக் கொடையாளர் ஒருவர் சங்கத்திற்கு என்று காணி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தற்போது இந்தக் கட்டடம் அமைப்பதற்கு மேற்படி சங்கம் நிதி வசதியைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

பார்வையற்றோருக்கான நூலகம் மற்றும் தூர இடத்தில் இருந்து [illegible] வருவோர் தங்கிச்செல்ல வசதியாக இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (203-224)

# குடாநாட்டில் உள்ள மதுபான நிலையங்கள் குறிப்பிட்ட நேரத்துக்கே திறக்கப்படவேண்டும்

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை என்று அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.குடாநாட்டில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள், மதுபான சாலைகள் யாவும் தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் திறக்கப்படவேண்டும். இல்லையேல் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பிராந்திய மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய யாழ்.குடாநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள், மதுபானசாலைகள் யாவும் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் முற்பகல் 11 மணிக்குத் திறக்கப்பட்டு பிற்பகல் 2 மணியுடன் மூடப்பட்டு விடுகின்றன.

மாலையில் 5 மணிக்குத் திறக்கப்பட்டு இரவு 8 மணிக்கு மூடப்பட்டு வருகின்றன.

இந்நேர காலத்தை மீறி மதுபான விற்பனை நிலையங்கள், மதுபானசாலைகளைத் திறப்போர் மீது மதுவரித் திணைக்களம் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதேவேளை - குடாநாட்டில் பனங்கள்ளின் சீசன் ஆரம்பமாகியுள்ளது. பனங்கள்ளினை விற்பனை செய்யும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கள்ளுத் தவறணைகளைத் திறப்பது தொடர்பாக எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.

கள்ளுத் தவறணைகளில் ஒரு போத்தல் கள் 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை - மதுபான விற்பனை நிலையங்கள், மதுபானசாலைகளில் அதீத விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் சாராயம், பியர் வகைகளின் விலைகள் மிக விரைவில் கட்டுப்பாட்டு விலைக்குக் கொண்டுவரப்படும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வர்த்தக மையங்கள் மீது புலிகள் வான் தாக்குதல்களை நடத்தக்கூடும்

## எச்சரிக்கிறார் இராணுவத் தளபதி

இந்தியாவின் தென்பகுதியிலுள்ள சிவிலியன்கள் மற்றும் வர்த்தக மையங்கள் மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதல்களை நடத்தக்கூடும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போது இராணுவத் தளபதி இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் காணப்பட்ட விமானங்கள் தாக்கியழிக்கப்பட்ட போதிலும், அவர்கள் இந்தியா மீது தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடுமென இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளும், அதன் ஆதரவாளர்களும் இந்திய மத்திய அரசின் மீது அதிருப்தியுடன் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வடகிழக்கு பகுதியின் ஊடாக கொழும்பில் தாக்குதல்களை நடத்தி பத்திரமாக செல்ல முடியுமாயின் அதேபோன்றதொரு தாக்குதலை இந்தியாவின் தென் பகுதியிலும் மேற்கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஏழு ஓடு பாதைகளும் கைப்பற்றப்பட்ட நிலையில் கொழும்பின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகளின் வான் பலத்தை உணர்ந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



மிகவும் தாழ்வாக பறக்கும் விடுதலைப் புலிகளின் இலகு ரக விமானங்களை அடையாளம் காண்பது கடினமானதெனவும், குறித்த விமானங்கள் இந்தியாவிற்குள் 150 முதல் 170 கிலோ மீற்றர் வரையில் சென்று தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடியதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரிசு வழங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.26

இடைநிலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தினூடாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே தனியாக நடத்தப்பட்ட கணனி மென்பொருளாக்கப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'நிக்கொட்' செயற்றிட்டத்தினூடாக ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பயிற்சியில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகத் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201-267)

## இராமகிருஷ்ண பரமஹம்சரின் 17ஆவது ஜெயந்தி விழா

ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியினர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 17ஆவது ஜெயந்தி விழாவையொட்டிய நிகழ்வுகளை நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தாவடியிலுள்ள மேற்படி சமிதி மண்டபத்தில் நடத்தவுள்ளனர். (201)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 * 12 * 1966



மறைவு 26 * 02 * 2001

### திருமதி மகாலிங்கம் சித்ரா (கலா)

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
எம்மைச் சீரும் சிறப்புமாக வளர்த்த தாயே
நீர் எம்மை விட்டு பிரிந்து எட்டு ஆண்டுகள்
எட்டித்தான் போனாலும் எமக்கு
எட்டவில்லையோ உன்முகம்

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு.

கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.

(83027)

# வன்னி மக்களைச் சாவிலிருந்து காப்பாற்றி சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## சர்வதேசத்திடம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.26

எமது மக்களை சாவிலிருந்து காப்பாற்றி சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேசசமூகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

'மனிதப் பேரவலத்துக்கு முடிவு கட்டும் படியே கேட்கிறோம்' என்ற தலைப்பில் மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வன்னி மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தித் தொடர்ந்து மௌனப் பிரார்த்தனையில் யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தினராகிய நாம் ஈடுபட்டு வருகின்றோம். எமது மக்களை உடனடியாகப் பாதுகாத்து அவர்களுக்கு அமைதியான வாழ்வை ஏற்படுத்த அனைவரையும் முன்வரும்படி வேண்டுகிறோம். எமது மக்களைக் கடுமையான துயரத்துக்குள்ளாக்கிற போரை நிறுத்தி அமைதி வழியில் தீர்வு காணுமாறு மனிதாபிமான ரீதியில் மீளவும் வலியுறுத்துகிறோம்.

வன்னியைச் சேர்ந்த எமது பல்கலைக்கழக மாணவர்கள் பலர் இந்தப் போரினால் பெற்றோர்கள், உறவினர்கள் என்று எல்லோரையும் இழந்து அனாதைகளாகத் துடித்துக்கொண்டு நிற்கிறார்கள். நாளும் பொழுதுமாக உறவுகளை இழந்து தவிக்கிறார்கள். இப்படி எமது மக்கள் அனைவரும் உறவுகளை இழந்து கடுமையான துக்கத்தில் இருக்கிறார்கள். தயவு செய்து இந்தப்போரை நிறுத்தித் தமிழ் மக்களுக்குச் சமாதானத்தை ஏற்படுத்தி அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றும்படியும் மனிதப் பேரவலத்தை முடிவுக்குக் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மிகவும் குறுகிய பிரதேசத்தில் பல லட்சம் மக்கள் அழிவின் விளிம்பில் இருக்கிறார்கள். பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. நாளாந்தம் 50 முதல் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்படுகிறார்கள். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று முழு மக்களும் எந்நேரமும் சாவுக்கு அஞ்சியபடி பல்வேறு நெருக்கடிகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதப் பேரவலத்துக்கு முடிவு கட்டும்படியே நாம் அனைவரையும் வேண்டுகிறோம். ஏற்றுக் கொள்ளக்கூடிய அமைதி வழியிலான தீர்வை வழங்குவதன் மூலமாக முப்பது வருடமாக நடைபெற்று வருகிற அழிவுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும்படி அனைத்துத் தரப்பையும் வேண்டி நிற்கிறோம்.

சாவின் விளிம்பில் நிற்கிற எமது மக்களது பாதுகாப்பிற்காகவும், சாவடைந்த மக்களது ஆத்ம சாந்திக்காகவும், உறவுகளை இழந்து நிற்கின்ற மாணவர்களது மன அமைதிக்காகவும் யாழ். பல்கலைக்கழகம் நாள்தோறும் சுழற்சி முறையில் மௌனப் பிரார்த்தனையிலும் உபவாசத்திலும் ஈடுபட்டு வருகின்றது - என்றுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியமலர் பத்திநாதர் (தவமணி)



பலாலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியமலர் பத்திநாதர் (தவமணி) (24.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் (இளையகுட்டி) மற்றும் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனுவல் திரேசம்மா (சின்னம்மா) தம்பதியரின் அன்பு மருமகளும் பத்திநாதரின் அன்பு மனைவியும் ராஜினி, சறோஜினி, றஞ்சினி (இத்தாலி), விநோத், சுதர்சினி, விநோதினி, நிஷாயினி, டயானா ஆகியோரின் பாசமிகு தாயும் குமார் (சவூதி), அன்றூ (இத்தாலி), றாதன், நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கரிஷின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26, சென்பற்றிக்ஸ் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம் (சி/557264)

தகவல்:
விநோத் (மகன்).

### இமானுவேல் திருச்செல்வம் செல்லையா

(புகையிரத நிலைய இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளஞ்சந்தி சாவகச்சேரியைப் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான E.T.செல்லையா 24.02.2009 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறேஸ் நேசமலரின் அன்புக்கணவரும் திருநேசன் (கனடா), திருக்குமார் (இலங்கை), மனோகரி (லண்டன்), மனோநிதி (நவீல்ட் பாடசாலை), றோகான் (கனடா), றோகனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி, அமிர்த்தி (I.S.A ஆங்கிலம், தென்மராட்சி), ரவீந்திரன், நியூட்டன் (N.S.B. திரு நெல்வேலி), சுதர்மினி, தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனும் திமத்தி, ஜெனுஷா, விக்டர், ஜனேல், அன்ரியா, ஜேக்கப் (கனடா), நிவேஷ், டினேஷ், கிறேஸ், மேரி (லண்டன்), ஆனின் (ஆசிரியை, யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி), நிரேஷ் (யாழ்.பல்கலைக்கழகம், வணிகபீடம்), அடிலா (கொழும்பு பல் கலைக்கழகம், கலைப்பீடம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*22, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி.*
*(மகள் 222 7093)*
*5ஆம் ஒழுங்கை மானிப்பாய் வீதி, உடுவில்.*
*(மகன் 0779236324)*

கனடா முகவரி:
Edgar Thirunesan Chellaiah
52, wayforderes
Scarborough, on M1B 3E4
Ph.No 416 - 3350435

தகவல்:
குமார் (மகன்)
நிதி (மகள்)

(83026)

## முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.26

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 81 முன்பள்ளிகளுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களும், நூல்களும் சமமாகப் பகிர்ந்து விநியோகம் செய்யப்படவுள்ளதாக மேற்படி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பெறுமதிமிக்க உபகரணத் தொகுதி ஒவ்வொன்றும் விளையாட்டு முறையூடான கற்றல் உபகரணங்களையும், சிறுவர் நூலகப் புத்தகத் தொகுதி, விளையாட்டு அல்லாத விளையாட்டு, பிள்ளை விருத்தி உபாயங்களினூடான தொடர்பாடல், முன்பள்ளி தேசியக்கொள்கை ஆகிய புத்தகங்களையும் [illegible] (201-267)


யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - சுவிஸ்
வாழ்த்துகின்றோம்

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும்
103ஆவது
மாபெரும் துடுப்பாட்டப் போட்டியில்
பங்குபற்றும்
யாழ்.மத்திய கல்லூரி அணியினரையும்
யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினரையும்
பெருமகிழ்வுடன் வாழ்த்துவதுடன்
இவ்வருடம் முதல் இப்போட்டியில்
ஆட்ட நாயகனாக (Man of the Match)
தெரிவுசெய்யப்படும் வீரருக்கு சுவிஸ் யாழ்.மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின் சார்பில்
10,000 ரூபா பணப்பரிசு
வழங்கி மதிப்பளிக்கப்படும் என்பதனை
பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மின்னஞ்சல்:
jccoba-swiss@hotmail.com
இணையமுகவரி:

நாகராஜா விஜயகுமார்,
தலைவர்,
யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
சுவிற்சர்லாந்து.

"...மத்தியின் மணிக்கொடி என்றும் தாழ்வுபெறாது"

(சி/557275)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத ஒழிப்புக்கான நடவடிக்கைகள் சிறுபான்மையினரின் உரிமையை மீறக்கூடாது

## இலங்கை அரசிடம் பிரிட்டன் வலியுறுத்து

லண்டன், பெப்.26

இலங்கையின் பயங்கரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகள் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் அமைந்திருக்க முடியாதென பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனிதாபிமான விவகாரங்களுக்காக நியமித்த பிரிட்டன் பிரதிநிதியை அரசு ஏற்றுக்கொள்ளாதது குறித்து வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் கவலை வெளியிட்டுள்ளார். மேலும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரத்தை எழுப்புவதற்குப் பல தடைகள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப் பிட்டுள்ளவை வருமாறு:-



''இலங்கை இராணுவத்தின் சமீபத்திய இராணுவ முன்னேற்றங்களால் ஏற்படும் மனிதாபிமான நெருக்கடிகள் எமக்கு கடும் கவலையை அளித்துள்ளன. நாங்கள் தொடர்ச்சியாக மனிதாபிமான யுத்தநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வருகிறோம். இலங்கையின் சகல சமூகங்களினதும் நியாயபூர்வமான கவலைகளுக்குத் தீர்வுகாணும் அரசியல் தீர்வு ஒன்றே இலங்கை மோதலுக்கு நிரந்தர தீர்வைக் கொண்டுவரும் என்பதை இலங்கை அரசுக்கு நாங்கள் தெளிவாகத் தெரிவிக்கிறோம்.

எமது பிரதமரின் விசேட பிரதிநிதியாக ஒருவரை நியமித்ததன் மூலம் இலங்கை அரசுடன் இணைந்து செயற்படும் எமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளோம். எமது விசேட பிரதிநிதியை இலங்கை அரசு ஏற்கச் செய்வதற்காக அந்த நாட்டுடன் தொடர்ந்தும் பேச்சுகளை மேற்கொண்டுள்ளேன்.

இலங்கையில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. முதலில் இலங்கை அதிகாரிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்தனர். விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்தனர். தற்போது விடுதலைப் புலிகள் அவ்வாறான அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் இந்த விடயத்தை ஆராய்வது தொடர்பாக தடையுள்ளது. இதன் காரணமாகவே ஐ.நாவில் இது குறித்துக் கருத்துக் கூறமுடியாது.

பொதுமக்கள் பாதுகாப்பாக யுத்தக் களத்திலிருந்து வெளியேறுவதைத் தடுக்கும் முயற்சியில் இருதரப்பும் ஈடுபட்டுள்ளதாக அறிகிறோம். இலங்கை ஒரு ஜனநாயக அரசு என்ற வகையில் அதனிடமிருந்து உயர் தராதரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன - என்றார். (அ-சி)

# பத்திரிகையாளர் கனக.அரசரட்ணம் காலமானார்



கொழும்பு, பெப்.26

கனடாவில் இருந்து வெளிவரும் 'தமிழர் செந்தாமரை' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், மூத்த பத்திரிகையாளருமான கனக. அரசரட்ணம் (வயது 57) நேற்று முன்தினம் கனடாவில் காலமானார்.

வீட்டில் கால்சறுக்கி படிக்கட்டில் வீழ்ந்ததால் தலையில் ஏற்பட்ட காயத்தை அடுத்து, சில மணிநேரத்தில் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கனடாவுக்குச் செல்வதற்கு முன்னர் எண்பதுகளில் நீண்டகாலம் கொழும்பில் 'வீரகேசரி' பத்திரிகையில் அவர் சிறந்த செய்தியாளராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது இறுதிக்கிரியைகள் அடுத்த திங்கட்கிழமை (2 ஆம் திகதி) கனடாவில் நடைபெறவுள்ளன. (சி)

# அரசியல் தீர்வுகளுக்கான ஆர்வத்தை இலங்கை அரசு வெளிப்படுத்தவில்லை

## அமெரிக்க செனட் வெளிவிவகாரக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 26

பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதில் தனக்குள்ள ஆர்வத்தை இலங்கை அரசு இதுவரை வெளிப்படுத்தவில்லை யென அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக் குழுவின் விவாதத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக்குழு செவ்வாய்க்கிழமை இலங்கை குறித்து விசாரணைகளை மேற்கொண்ட வேளை அந்த விசாரணைகளுக்குத் தலைமை வகித்த ஜனநாயகக் கட்சி செனட்டர் பொப் கசே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

''இலங்கையில் அரசியல் உடன்பாடொன்று ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை. அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேற்கொள்ளாது போலத் தென்படுகின்றது. அதேவேளை, அரசு விடுதலைப் புலிகளுக்கு மாற்றீடான சக்திகளைக் கண்டு பிடிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை; தமிழ் மக்களுக்கு நம்பகத்தன்மை மிகுந்த மாற்றீடு முன்வைக்கப்படவுமில்லை'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

''யுத்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் தமிழ் மக்கள் பாரபட்சத்திற்கு உட்படுத்தப்பட்டால் அதற்குப் பிறகு இன்னுமொரு மாற்று வன்முறைகள் வெடிக்கலாம்'' என அவர் எச்சரித்துள்ளார்.

கடும் நிபந்தனையுடனேயே கடன் வழங்க வற்புறுத்து

இதேவேளை, செனட்டின் வெளிவிவகாரக்குழு நடத்திய இலங்கை குறித்த விசாரணையில் பதிலளித்த இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜெவ்றி லன்ஸ்டெட், அமெரிக்காவும் ஏனைய உலக நாடுகளும் இலங்கைக்கு கடும் நிபந்தனைகளுடனேயே உதவிகளை வழங்க-வேண்டுமென வற்புறுத்தியுள்ளார்.

செனட்டிற்கு சாட்சியமளிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை நிலைவரத்தை இடர்கால அடிப்படையில் அணுக வேண்டும். அரசுக்குத் தனது பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுள்ளது.


தனது இராணுவ நடவடிக்கையில் பொமக்களுக்குப் பாரிய இழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் உள்ள நீண்டகால விடயம் அரசியல் மாற்றத்திற்கான தேவையாகும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு தீர்வு காண வேண்டிய நீண்டகாலத் துயரங்கள் உள்ளன. இதற்குத் தீர்வுகாணவேண்டும்.

கொழும்பில் அதிகாரத்தைக் குவித்துள்ள இலங்கையின் அரசியல் முறை மாற்றப்பட வேண்டும்-என்றார். (அ-சி)

# பொருளாதார சரிவை ஈடுகட்டும் முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது - ஒபாமா



வாஷிங்ரன், பெப். 26

''அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவை ஈடுகட்ட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் நல்ல பலனை அளித்து வருகின்றன'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று புதன் கிழமை, முதன் முதலாக அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் பெருமிதம் தெரிவித்துக் கொண்டார்.

''தற்போதைய முனைப்பான நடவடிக்கையால், நாடு பொருளாதார இடர்ப்பாட்டிலிருந்து மீளத் தொடங்கியுள்ளது. இன்னும் இரு வருடங்களுக்குள் 35 இலட்சம் வேலைகள் உருவாக்கப்படும். எனவே, வேலையில்லாத் திண்டாட்டம் முற்றாக நிவர்த்திச் செய்யப்பட்டு விடும்'' என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

''பொருளாதாரத்தை மீட்க ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம், மக்களுக்கே பயனளிக்கும். இப்பணம் வங்கிகளையோ, நிதி நிறுவனங்களையோ சென்றடைய லாம். அமெரிக்காவை நாம் மீள் நிர்மாணம் செய்கிறோம். நாட்டைச் சரிவிலிருந்து மீட்கிறோம். இதை அனைத்து மக்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் தலைமறைவாக இருந்துவரும் அல்-குவைதா தீவிரவாதிகள் முற்றிலும் ஒழிக்கப்படுவார்கள். இதற்காக கூட்டணிகளோடு இணைந்து புதிய அணுகு முறையைக் கையாளுவோம். அமெரிக்க நட்பு நாடுகளின் எண்ணிக்கையும் விரிவுபடுத்தப்படும் என்றும் ஒபாமா தெரிவித்துக் கொண்டார்.

# பிரபா சரணடைய மாட்டார்; கோத்தபாய நம்பிக்கை

கொழும்பு, பெப். 26

விடுதலைப் புலிகளின் தலைவர் இன்னமும் இலங்கையிலேயே உள்ளார் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அவர் சரணடையமாட்டார். படகுகள் மூலம் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயல்வார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏ.எவ்.பி.செய்திச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனை தெரி வித்தார்.

அவர் அந்தச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அவர் இன்னமும் நாட்டிலேயே இருக்கிறார். அவர் தற்கொலை செய்துகொள்வார் அல்லது சரணடைவார் எனக் கருதுவதற்கான காரணங்கள் இல்லை.

30 வருடங்கள் போராடிய பின்னர் அவர் சைனைட் அருந்தமாட்டார். தப்புவதற்கே முயற்சிப்பார்.

பிரபாகரன் வெளிநாடுகளுக்குப் படகுகள் மூலம் செல்ல முயலலாம். புதிய அடையாளத்துடன் வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்வதற்கு முயலலாம்.

அதுவே அவருக்குச் சாத்தியமான வழிமுறையாகும். பிரபாகரன் அனுபவமிக்க நாற்பது அல்லது ஐம்பது உறுப்பினர்களுடன் தப்பிச் சென்ற பின்னர் விடுதலைப் புலிகள் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு பொதுமக்களை அனுமதிக்கலாம்.

இலங்கை கடற்படையினரும், விமானப் படையினரும் கடல் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நாங்கள் பாரிய முற்றுகையை மேற்கொண்டுள்ளோம். எனினும், படகுகள் மூலம் செல்ல அவர்கள் முயலலாம். அது கடினமான நடவடிக்கை என்ற போதிலும் அவர் இதற்கு முயற்சி செய்யக்கூடும்.

ஒரு பொதுமகன் கூட உயிரிழக்க வாய்ப்பில்லை

விடுதலைப் புலிகளின் கீழ்நிலை போராளிகள் பொது மன்னிப்பு கேட்டு சரணடைவதே அர்த்தமான விடயம்.

பொதுமக்களின் நலனைக் கருத்தில் எடுத்ததால் கடந்த சில நாள்களில் புலிகளுக்கு எதிரானஇராணுவ நடவடிக்கையின் வேகம் குறைவடைந்துள்ளது.

மேலும் மக்கள் அற்ற பகுதிகளிலேயே மோதல் இடம்பெறுகின்றது.

நாங்கள் ஆட்லறி மற்றும் நீண்ட தூர ஆயுதங்களை பயன்படுத்தாததால் ஒரு பொதுமகன் கூட உயிரிழக்க வாய்பில்லை.(அ-சி)

# புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கக்கூடாது; முழுவதையும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும்!

## இப்படி வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 26

புலிகளின் ஆயுதங்களை முற்றாகக் களைய வேண்டுமே தவிர அரசு கூறுவதுபோல் கீழே வைக்கக்கூடாது. அவ்வாறு கீழே வைத்தால் அவர்கள் மீண்டும் ஆயுதமேந்துவர்.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிகள் யுத்தநிறுத்தம் ஒன்றுக்குத் தயாராகிறார்கள் என்று தெரிவித்துள்ளனர். அவர்களின் தோல்வியை ஈடு செய்வதற்காகவே அவர்கள் இவ்வாறு யுத்தநிறுத்தத்துக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எந்த வகையிலும் புலிகளின் இந்த அறிவிப்பை ஏற்கமுடியாது. அரசு எச்சந்தர்ப்பத்திலும் இதை ஏற்கக்கூடாது. புலிகளையுத்தத்தால் தோற்கடிக்கும் நடவடிக்கையை அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

புலிகள் அவர்களின் பிடியில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களை உடன் விடுவிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்த வேண்டுகோளைப் புலிகளிடம் விடுக்க வேண்டும்.

தமிமீழக் கனவு தகர்ந்து போகிறது

தென்பகுதி மக்கள் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் சகோதரர்களாக வாழ விரும்புகின்றனர். தமிழ் மக்கள் புலிகளின் பிடியில் இருந்து விடுபடவேண்டும்.

புலிகளின் போலியான தமிழீழக் கனவு யுத்தத்தால் தகர்ந்துகொண்டு போகின்றது. ஆனால் இந்தக் கனவைக் கருத்தியல் ரீதியாகச் சிதைக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஈழக்கனவு யுத்தத்தால் தோற்கடிக்கப்படுவது போல் அரசியல் நகர்வின் ஊடான கருத்தியல் மூலமும் தோற்கடிக் கப்படல் வேண்டும்.

அரசு கூறுவதுபோல் புலிகள் அயுதங்களைக் கீழே வைக்கக்கூடாது. அவர்கள் அவற்றை முற்றாகக் களைய வேண்டும். கீழே வைத்தால் அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவர் - என்றார். (அ-சி)

# மாணவர்கள் மத்தியில் மோதல்; களனி பல்கலை. மூடப்பட்டது!

கொழும்பு, பெப்.26

களனி பல்கலைக்கழத்தினுள் இரு பீட மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்து நேற்று பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் களனி பல்கலைக்கழக வளாகத்தினுள் இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

பொலிஸாரால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து மோதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பல்கலைக்கழகத்தை காலவரையறையின்றி மூட முடிவு எடுக்கப்பட்டது.

விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் அனைவரும் இன்று காலை 7.30 மணிமுதல் வெளியேற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் ஆயுதத்தைக் கீழே போட்டால் தமிழரை யாராலும் காப்பாற்றமுடியாது

## ஆதங்கப்படுகிறார் டாக்டர் ராமதாஸ்

மதுரை, பெப்ரவரி 26

இலங்கையில் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்பே விடுதலைப் புலிகள் இயக்கம். புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் தமிழர்களை யாராலும் காப்பாற்ற முடியாது - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மதுரையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஈழத்தமிழர்களின் தாய்மண்ணில் தற்போது தமிழினம் அழிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மத்திய அரசு, விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும். இருதரப்பினரும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் எனக் கூறி வருகிறது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் தமிழர்களை யாராலும் காப்பாற்ற முடியாது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசு என்ன சொல்கிறதோ அதை இந்திய அரசு ஏற்கக்கூடாது.

2004இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்தபோது குறைந்தபட்ச செயற்திட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு இருந்தது. இதில் தி.மு.க., பா.ம.க. உட்பட 15 கட்சிகள் கையெழுத்திட்டிருந்தோம். ஆனால் அந்தக் கோரிக்கை இன்று வரை நிறைவேற்றப் படவில்லை.



இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நான் டில்லியில் சோனியாவை 35 நிமிடங்கள் சந்தித்து உரையாடினேன். அவர் ஆர்வத்துடனும், இரக்கத்துடனும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கேட்டறிந்தார். அதன் பிறகு வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்திக்கும்படி கூறினார்.

ஆனால் நான் அவரைச் சந்திப்பதற்கு முன்பே அவர் வெளியிட்ட அறிக்கை 7 கோடி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிராக அமைந்து விட்டது.

இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் உரிமைக்காக 60 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அதில் 30 ஆண்டுகள் சாத்வீகமாகவும், 30 ஆண்டுகள் ஆயுதம் ஏந்தியும் போராடி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள தி.மு.க., பா.ம.க. உட்பட பல கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வமாக உள்ளது. இலங்கையுடன் வெளியுறவு கொள்கையை வகுக்கும்போது எங்கள் கருத்துக்களை கேட்காமல் வகுக்கக்கூடாது. தமிழக முதல்வரை கலந்து பேசாமல் இலங்கை தொடர்பான வெளியுறவு கொள்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளக்கூடாது. ஏனென்றால் ஜனாதிபதி உரைக்கு முரண்பாடாக பிரணாப் முகர்ஜியின் அறிக்கை அடுத்த நாளே அமைந்து விட்டது.

இலங்கையில் தற்போது நடக்கும் போர் தமிழ் இன அழிப்பு போராகும். இதை புலிகளால் மட்டும்தான் தடுக்க முடியும். தமிழர்களின் உரிமைகளுக்காக போராடி வரும் அமைப்புத்தான் புலிகள் இயக்கம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முதல்வர் தலைமையில் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றுதான் கூறினோம். ஆனால் அவர் நாங்கள் நாடகம் ஆடுவதாகக் கூறுகிறார்.

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கும் தேர்தல் கூட்டணிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை - என்றார்.

## தமிழகத்தில் புலிகளின் ஊடுருவல் இல்லை கடலோரக் காவல் படை டி.ஜி.பி. தெரிவிப்பு

மண்டபம், பெப். 26

இந்திய கடல் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால், தமிழகத்தில் புலிகளின் ஊடுருவல் இல்லை - என்று கடலோரக் காவல்படை டி.ஜி.பி. ஜெகன்மோகன் சேஷாத்திரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அந்நாட்டு இராணுவத்துக்கும், விடுதலை புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது. இதையடுத்து, இந்தியக் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு பணியைத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மண்டபத்தில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையிலான 870 கி.மீ. பரப்பளவில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்படும். மேலும், கொல்கத்தாவில் தயாரிக்கப்படும் ரூ. 2.15 கோடி மதிப்புள்ள 12 தொன் எடை கொண்ட ரோந்துப் படகு, ரூபா ஒரு கோடி மதிப்புள்ள 5 தொன் எடை கொண்ட ரோந்துப் படகு ஆகியவை இன்னும் ஒரு மாதத்துக்குள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும். இந்தியக் கடல் எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால், தமிழகத்தில் புலிகள் ஊடுருவல் இல்லை. நடுக்கடலில் மீனவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், உடனடியாக எங்களைத் தொடர்புகொள்ள தொலைபேசி எண்கள் வழங்கப்படும் - என்றார்.

# புலிகள் மீதான தடையை மத்திய அரசு தற்காலிகமாக ரத்துச் செய்யவேண்டும்

## வலியுறுத்துகிறார் சரத்குமார்

டில்லி, பெப். 26



விடுதலைப் புலிகள் மீதான தடையை மத்திய அரசு தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும் - என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் வற்புறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் டில்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை இந்தியாவும், இலங்கை அரசும் தற்காலிகமாக நீக்கினால் விடுதலைப் புலிகளுடன் சமரச பேச்சு நடத்துவதற்கு இணக்கமான சூழ்நிலை உருவாகும். இதன் தொடர்ச்சியாக, புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தும் ஏற்பாட்டை கவனிக்க தமிழக அரசியல் கட்சிக் குழு ஒன்று இலங்கை செல்ல வேண்டும்.

தமிழக முதல்வர் கருணாநிதி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட தலைவர்கள் இலங்கை சென்று அந்த நாட்டு அரசுடன் அமைதிப் பேச்சு நடத்த வேண்டும். இதற்கு மத்திய அரசு உதவவேண்டும்.

உள்நாட்டுப் போரினால், 8 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இந்தியா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தங்கள் சொந்த நாட்டிற்கு உடனடியாகத் திரும்ப வேண்டும். அப்படி திரும்புவதன் மூலம் இலங்கைதமிழர்களின் மக்கள் சக்தி வலுப்பெறும்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவமனைகள் மீது அந்நாட்டு இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை அரசுக்கு விருப்பம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. புலிகள் போர் நிறுத்தத்திற்குத் தயாராகவுள்ளனர்.

எனவே, அமைதிப் பேச்சுக்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும். அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தொண்டர்கள் அனைவரும், தங்கள் உடலில் கடைசிச் சொட்டு ரத்தம் உள்ளவரை இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், அமைதி திரும்பவும் குரல் கொடுப்பார்கள் - என்றார்.

## ஈழத் தமிழ் உறவுகளை நினைவில் சுமந்தபடி

# முத்துக்குமார் மூட்டிய கந்தகத் தீயை இனி எவராலும் அணைக்க முடியாது

## வைகோ ஆவேசம்



இலங்கையில் தாய்மார்கள், குழந்தைகள் அழிக்கப்படும் நிலையில் அவர்களுக்கு அரணாகப் போராடும் புலிகளை ஒழித்துக்கட்டுவோம் என்று கூறும் மஹிந்த ராஜபக்ஷவின் நாக்கை அறுக்க முடியாதா என நாங்கள் துடித்துக்கொண்டு இருக்கிறோம் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குமுறியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படக் கோரியும், சென்னை உச்ச நீதிமன்றில் சட்டத்தரணிகள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் நேற்றுமுன்தினம் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக உண்ணாவிரதம் இருந்த சட்டத்தரணிகளை வாழ்த்திப் பேசும்போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழீழ மக்களின் துன்பத்தை தவிர்க்க உறக்கத்தில் இருக்கும் தாய்த் தமிழகம் விழிக்காதா என்று நினைத்த நேரத்தில் தொப்புள்கொடி உறவினரான சகோதரர்களைப் பாதுகாக்க, சட்டத்தரணிகள் போராட்டத்தில் குதித்திருப்பது பாராட்டுக்குரியது.

எந்தப் போராட்டம் என்றாலும் கந்தகம் என்னும் தீப்பொறி களம் பதிக்க வேண்டும். அது போல தீக்குளித்து இறந்த முத்துக்குமார் என்னும் கந்தகம் மூட்டிய தீயை இனி யாராலும் அணைக்க முடியாது. அது இன்று ஐ.நா. சபையிலும் எரிகிறது. இலங்கைத் தமிழர்களுக்காக 4 மாதங்களாக போராட்டம் நடக்கிறது.

தமிழகத்தில் இருந்து கொண்டு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் சுப்பிரமணியசுவாமி மீது யாரும் தாக்குதல் நடத்தவில்லை.

தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க முட்டைகளை வீசியுள்ளனர். இலங்கையில் தாய்மார்கள், குழந்தைகள் அழிக்கப்படும் நிலையில் அவர்களுக்கு அரணாகப் போராடும் புலிகளை ஒழித்துக்கட்டுவோம் என்று கூறும் மஹிந்தவின் நாக்கை அறுக்க முடியாதா என்று நாங்கள் துடித்துக்கொண்டிருக்கிறோம். சட்டத்தரணிகளின் அறவழிப் போராட்டம் தொடரவேண்டும். அதற்கு நாம் உறுதுணையாக இருப்போம் - என்றார்.

# உயிருக்காகப் போராடும் ஈழத் தமிழருக்காக எனது பிறந்தநாளைக் கொண்டாடாதீர்கள்!

## ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, பெப். 26

இலங்கையில் தமிழ்க் குடும்பங்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், எனது பிறந்தநாளை கொண்டாட வேண்டாம் - என்று தி.மு.கவின் பொருளாளரும், அமைச்சருமான மு.க.ஸ்டாலின் கட்சித் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வரும் மார்ச் முதலாம் திகதியன்று எனது பிறந்தநாள் என்பதால், கட்சி தோழர்கள் அதனை கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இலங்கையில் நம் தமிழ்க் குடும்பங்கள் உயிருக்குப் போராடி கொண்டிருக்கிறார்கள். இராணுவத் தாக்குதலை நிறுத்தி அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில் எனது பிறந்தநாள் விழாவை நடத்திட என் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற முயற்சியை மேற்கொண்டுள்ள கட்சித் தோழர்களுக்கும் - இளைஞர் அணி நண்பர்களுக்கும் நான் அன்புடன் தெரிவித்துக் கொள்வது, உங்கள் ஒவ்வொருவரின் அன்பும், வாழ்த்தும் எந்நாளும் எனக்குண்டு என்பதை நான் அறிவேன்.



எனவே, எக்காரணம் கொண்டும் பிறந்தநாள் விழா கொண்டாடுவது - அதற்கான விளம்பர பதாகைகள் வைப்பது போன்ற முயற்சிகளில் கண்டிப்பாக ஈடுபட வேண்டாமென உங்களில் ஒருவனாகக் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# தமிழருக்கு சமவுரிமை கிடைக்க இலங்கை அரசு 13ஆவது திருத்தச்சட்டத்தை பின்பற்றவேண்டும்

## பிரகாஷ் கரத் தெரிவிப்பு

இலங்கையில் போரை நிறுத்த மத்திய அரசு வற்புறுத்த வேண்டும். உலக நாடுகளின் வற்புறுத்தலுக்கு பின்னரும் இலங்கை அரசு செவிசாய்க்காமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது - என்று மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலர் பிரகாஷ்கரத் கூறினார்.

கோயம்பத்தூரில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கூறுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் நடைபெறும் போரில் தமிழர் கொல்லப்படுவது, மிகவும் வருத்தம் அளிக்கக்கூடிய விடயம். போர் நடைபெறும் பகுதியில் அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடத்தக்கூடாது.

ஐ.நா. சபை, மற்றும் சர்வதேச நாடுகள் வற்புறுத்திய பின்னரும், இலங்கை அரசு போரை நீடித்து வருகிறது.



போரை நிறுத்த இந்திய அரசு இலங்கைக்கு நிர்ப்பந்தம் விதிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்கும் வகையில் 13ஆவது சட்டத்திருத்தத்தை அந்த நாட்டு அரசு பின்பற்ற வேண்டும். இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் போரை நிறுத்தி அரசியல் தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# உயர்நீதிமன்ற காவல் நிலையத்தை உடன் இடமாற்றம் செய்ய வேண்டும்

## தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்று உத்தரவு

புதுடில்லி, பெப். 26




உயர்நீதிமன்ற வளாகத்தினுள் இயங்கிவரும் காவல்நிலையத்தை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் - என்று தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. அதைத் தமிழக அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது.

மேலும் உயர்நீதிமன்றத்துக்குள் பொலிஸார் நுழைந்து சட்டத்தரணிகள் மீது பலப்பிரயோகம் செய்த சம்பவம் குறித்து இன்று வியாழக்கிழமைக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. யாருடைய அனுமதியின்பேரில் உயர்நீதிமன்ற வளாகத்துக்குள் பொலிஸார் சென்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம் என்றும், இவ்விவகாரத்தில் நீதி விசாரணை நடத்துவது தொடர்பாக முறையான உத்தரவு இன்று வெளியிடப்படும் என்றும் உச்சநீதிமன்ற ஆயம் கூறியது. அதேசமயம், சட்டத்தரணிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதற்கும், நீதிமன்ற அறைக்குள் கோஷங்கள் எழுப்புவதற்கும் உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

சட்டத்தரணிகளின் கார்கள் மற்றும் உயர்நீதிமன்றக் கட்டடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பிடுமாறு தமிழக அரசை கேட்டுக்கொண்ட உச்சநீதிமன்றம், தாக்குதலில் காயமடைந்த சட்டத்தரணிகளுக்கு இன்று வியாழக்கிழமைக்குள் இழப்பீடு அறிவிக்க வேண்டும் எனத்தெரிவித்தது. இவ்வழக்கு [illegible] அடுத்த விசாரணை இன்று [illegible] எனத் தெரிவிக்கப்பட்டது.

# நயன், அஸின், மீரா, பரத், சேரன், சுந்தர்சி உட்பட 71 பேருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது

நடிகைகள் சரோஜாதேவி, நயன்தாரா, அஸின், மீராஜாஸ்மின், நடிகர்கள் பரத், சுந்தர்சி உட்பட 71 பேருக்கு கலைமாமணி விருது வழங்கப்படும் - என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் கலைத்துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் கலைஞர்களைப் பாராட்டி ஆண்டுதோறும் கலைமாமணி எனும் மாநில அளவிலான விருதை வழங்கிச் சிறப்புச் செய்து வருகின்றது. விருது பெறும் ஒவ்வொரு கலைஞருக்கும் பொற்பதக்கம் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு கலைமாமணி விருதுக்கான கலைஞர்களை தேர்வு செய்து தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. அப்பரிந்துரைகளையேற்று முதல்வர் கருணாநிதி பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார். விருது பெறுபவர்கள் விவரம் வருமாறு-



நடிகைகள் நயன்தாரா, அஸின், மீரா ஜாஸ்மின், ஷோபனா, சரோஜாதேவி -

நடிகர்கள் வி.பசுபதி, சுந்தர்.சி, பரத், இயக்குநர் சேரன், வையாபுரி உட்பட இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கிய 71 பேருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் விருது வழங்கலுக்குரிய போட்டிகள்-சனியன்று இறுதிநாள்

யாழ்ப்பாணம்,பெப்.26

இலங்கை இளைஞர் சேவைகள் மன்றத்தினர் இவ் வருடத்துக்கான இளைஞர் விருது வழங்கல் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, பாடல் இயற்றுதல், மௌன நடிப்பு, அறிவிப்பாளர், இளம் பாடகர், நாட்டார் பாடல்கள், புல்லாங்குழல், சித்தார், வயலின், மிருதங்கம், தவில், கிற்றார், ஓகன், டிரம்ஸ், செக்ஸ்போன், எகோடியன் மற்றும் சித்திரம், சிற்பம், சிலைகள், புகைப்படம், பரதநாட்டியம், கிராமிய நடனம், கதக், புதிய நிர்மாணிப்பு, நடனங்கள், நாடகம், குறுநாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் நாளை மறுதினத்திற்கு முன்னர் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)


தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிதியுதவியுடன் இயங்கும்

சாவகச்சேரி கணனிப் பயிற்சி நிலையத்தின்

**சான்றிதழ் வழங்கும் வைபவம்**

காலம்: 2009.02.28 சனிக்கிழமை காலை 9.00 மணி

இடம்: கலாசார மண்டபம்
(சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி)

தலைவர்: வை.இராஜரட்ணம் அவர்கள்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

முதன்மை விருந்தினர்:
திரு.கு.பிறேமகாந்தன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)

சிறப்புரை: திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள்
(ஓய்வுபெற்ற நீதிபதி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கணனிப் பயிற்சி நிலையம்
114, டச்சு வீதி, சாவகச்சேரி.


# 130 குடும்பங்களுக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு

வண்ணை, பெப்.26

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்துள்ள130 குடும்பங்களுக்கு புதிதாக அமைத்து வழங்கும் வீட்டுத்தொகுதிகளை எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்து வீடுகளை பயனாளிகளுக்கு வழங்க உள்ளது.

நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் அகில இலங்கை திருச்சபையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான ஆணைக்குழுத் தலைவர் ஆயர் ஹறால்ட் பெரேரா ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

ஒவ்வொன்றும் 9 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்படி வீடுகளில் திக்கத்தில் 55 வீடுகளும், இன்பர்சிட்டியில் 45 வீடுகளும் சுப்பர் மடத்தில் 30 வீடுகளுமாக 3 தொகுதிகளில் அமைந்துள்ளன. (160)

# தேர்முட்டியில் ஏறிய சிறுவர்கள் இருவர் வீழ்ந்து காயமுற்றனர்

யாழ்ப்பாணம், பெப்.26

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் நேற்று கோயில் தேர் முட்டியில் புறாப்பிடிப்பதற் காக ஏறிய இரண்டு சிறுவர்கள் தவறி வீழ்ந்து காயங்களுடன் யாழ்.வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த எஸ்.நிதுஷன் (வயது-12), பி.சுமன் (வயது-12) ஆகிய இருவரும் ஒரே பாடசாலை மாணவர்களாவர், இவர்களுள் நிதுர்ஷன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-25-7)

# சமய சந்நிதிகளில்

கோப்பாய், பெப்.26

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (1-72)

* * *

யாழ்ப்பாணம், பெப்.26

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலய மாசி மக இலட்சார்ச்சனை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி மாசி மகத் தினத்தன்று அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறும். (1-207)

# சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.26

மகளிர் அபிவிருத்தி நிலையம் ''மனித உரிமை மீறல்களும் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களும்'' என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கினை இன்று வியாழக் கிழமை தாவடி தெற்கு கொக்குவில் ஸ்ரீகாளி சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

பல்வேறு சட்ட விதி முறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் தொடர்பான சட்ட ஒழுங்கு முறைகள் பற்றிய போதிய தகவல்கள் அறியப்படாமையும், போதிய விழிப்புணர்வு இல்லாமையுமே ஒரு காரணமாகும்.

ஆகவே இக் கருத்தரங்கு இந் நோக்கத்தை நிறைவு செய்யும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்று நிலையம் தெரிவித்துள்ளது. இக் கருத்தரங்கில் சட்டத் தரணி மு.றெமிடியஸ், வெளிக்கள உத்தி யோகத்தர் செல்வி ஆர்.நாகரூபினி, திருமதி பி.இராஜேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.


# மரண அறிவித்தல்கள்



## திருமதி சிவபாதம் இராசமணி

கொக்குவில், பிரம்படியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் இராசமணி நேற்று (25.02.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் முத்தையா சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும் சிவகஜன், சிவசிறி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமளாதேவியின் அன்பு மாமியாரும் நகுலேஸ்வரி, சிவபாக்கியம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புஸ்பராணி, மகேஸ்வரி (வவுனியா), ராஜேஸ்வரி, செல்வராணி (இந்தியா), தனபாலசிங்கம் (ஜேர்மன்), புஸ்பமலர் (சிலாபம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்
(கஜன், சிறி)

செட்டித்தெரு,
நல்லூர்.

## திருமதி செல்வராசா யோகேஸ்வரி



23.02.2009 அன்று காலமான, கைதடி கமநலச் சேவைகள் நிலைய உத்தியோகத்தரும் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தரான சுப்பிரமணியம் செல்வராசாவின் துணைவியாரும் ஆகிய திருமதி செல்வராசா யோகேஸ்வரியின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.செல்வராசா
(செல்வி-கணவர்)

கைதடி தெற்கு ,
கைதடி.

## இளையதம்பி கந்தையா
(உரிமையாளர், சுன்னாகம் திறம் சுருட்டுக்கடை)
(24.02.2009)

## திருமதி கந்தையா பாலாம்பிகை
(19.02.2009)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தையா அவர்கள் 24.02.2009 அன்றும் அன்னாரின் மனைவி கந்தையா பாலாம்பிகை அவர்கள் 19.02.2009 அன்றும் காலமானார்கள்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுமித்ரா முரளிதரன் (மகள்)
செ.முர்ளிதரன் (மருமகன்)

வரியப்புலம்,
சுன்னாகம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## நவநீதகிருஷ்ணன் கெங்காதரன்

BBA(Hons), P.G.Dip: in POL. EDU., MCP, MBA
(விரிவுரையாளர் முகாமைத்துவத்துறை யாழ்பல்கலைக்கழகம்.)

அவர்கள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை பேராதேனியா பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பொதுப்பட்ட மளிப்பு வைபவத்தில் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டம் (MBA) பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
சிறீக்காந் குடும்பம்
மற்றும் நண்பர்கள்

முகத்துவாரம்,
கொழும்பு-15

# நன்றி தெரிவிக்கின்றேன்

கடந்த (23.02.2009) திங்கட்கிழமை சிவராத்திரி தினத்தன்று கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் தவறவிடப்பட்ட காப்பை கண்டெடுத்து தந்துதவிய கோயில் குருக்கள் ஐயா அவர்களுக்கும் கோயில் நிர்வாகத்தினருக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சின்னராசா றமேஸ்

நவாலி வீதி, முதலாம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை

# கண்ணீர்அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
மோகனரஞ்சி சண்முகநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி சிவஞானசக்தி கந்தையா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின்பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

ஆசிரியர் கழகம்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
10 ★ 03 ★ 1943

உதிர்வு
28 ★ 01 ★ 2009



## அமரர் சிவசம்பு கருணானந்தன்

(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகர் (IPT), அஞ்சல் தொலைத்தொடர்பு திணைக்களம்)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.02.2009) வியாழக்கிழமை வில்லூன்றி புனிதத் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.02.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.பவானந்தன்
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 21 ★ 08 ★ 1935



மறைவு: 27 ★ 01 ★ 2009

## அமரர் வேலாயுதம் கந்தசாமி (அனலைதீவு)

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் மற்றும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (27.02.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

5ஆம் வட்டாரம்,
ஐயனார் கோயிலடி,
அனலைதீவு.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட சிலரின் சடலங்களைப் படங்களில் காணலாம்.

# திருமலையிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டவர்களில் இதுவரை 15 பேர் ஆஸ்பத்திரிகளில் மரணம்

திருகோணமலை, பெப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் பகுதியிலிருந்து 'கிறீன் ஓசியானிக்' கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்ட 368 நோயாளிகளில் ஒருவர் வழியில் மரணமடைந்துள்ளார் என திருகோணமலை மருத்துவப் பணிகளுக்கான இணைப்பாளர் டாக்டர் ஞானகுணாளன் நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

53 வயதான கிளிநொச்சி வாசியான என்.சிறிதர்சன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, முல்லைத்தீவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களில் திருகோணமலையில் இதுவரை மொத்தமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், கண்டி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட இருவர் உயிரிழந்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் புதுமாத்தளனிலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்பட்டவர்களில் 15 பேர் மரண மடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்தச் செல்லப்பட்டோரில் 190 நோயாளர்களும் மற்றும் அவர்களைச் சார்ந்த உதவியாளர் 195 பேரும் அடங்குகின்றனர்.

இதேவேளை, நோயாளர்கள் மற்றும் காயங்களுக்கு இலக்காகி திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களில் ஒரு தொகுதியினரை மன்னார் அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் கூறப்படுகின்றது.

தற்போது திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் 740 நோயாளர்களும் மெதடிஸ்த கல்லூரியில் உள்ள தற்காலிக முகாமில் 28 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மாலை முதல் உக்கிரமடைந்துள்ள இந்த மோதல்களின் போது புலிகள் தரப்புக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் படைத்தரப்புக்கும் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மோதலை அடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலி உறுப்பினர்களின் 21 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு -

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, சாலை, புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு வடக்கு போன்ற பகுதிகளினூடாக முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டு வரும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இராணுவத்தின் 53, 55, 57, 58, 59ஆவது படையணிகள் மற்றும் 4, 8 ஆவது விசேட படையணிகளைச் சேர்ந்த இராணுவத்தினரே இந்த முன்னேற்ற முயற்சிகளை மேற்காண்டு வருகின்றனர். படையினரின் இந்த முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக புலிகள் தீவிர முயற்சிகளை எடுத்த போதிலும் அவை படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளன - என்றும் தெரிவித்தார். (அ-1-6)

## தமிழகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோகுலரத்தினம் (வயது 40) என்பவர் திடீரென அங்கு தீக்குளித்தார்.

அவர் வைத்திருந்த கடிதத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடனடித் தீர்வுகாண வலியுறுத்தியும், முதல்வர் விரைவில் உடல்நலம் பெறவேண்டியும் தாம் தீக்குளிக்கிறார் என எழுதப்பட்டிருந் தது. தி.மு.க. கொடியையும் அவர் வைத் திருந்தார். இத்தீக்குளிப்புச் சம்பவம் குறித்து சூலக்கரை பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பாக். உளவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல நாடுகளில் செயற்படுவதை தாங் கள் அறிந்துள்ளனர் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதன் காரணமாக இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வருவதற்காக விஸாவிற்கு விண்ணப்பிப்பவர்கள் அனைவரும் மிகவும் உன்னிப்பாக பரிசீலிக்கப்படு கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ச.தர்மலிங்கம் (வயது - 68), இ.வாகினி (வயது - 26) ஆகியோர் உயிரிழந் தனர். ஏனையோரின் பெயர் விவரம் உடனடியாகக் கிடைக்கப்பெறவில்லை.

காயமடைந்தவரின் விவரம் வருமாறு:-

யோ.இந்திராணி (வயது - 41), த.யோகராசா (வயது - 41), இ.ரவீந்திரகுமார் (வயது - 39), வ.ராதிகா (வயது - 40), உ.அனுராஜ் (வயது -18), த.சரஸ்வதி (வயது - 57), இ.வரன் (வயது - 11), இ.நளினி (வயது - 16), பா.டினேஸ் (வயது - 14), க.அமிர்தலிங்கம் (வயது - 52), பொ.புண்ணியமூர்த்தி (வயது - 38), க.யேந்தபத்மினி (வயது - 54), க.ஆனந்தன் (வயது - 34), ஆ.யுவனேஸ், நிரோசன் (வயது - 26), சி.புலேந்திரன் (வயது - 21), சு.புஸ்பானந்தன் (வயது - 33), ஆ.குகனேசன் (வயது - 27), பாலேந்திரன் (வயது - 26), புவனேஸ்வரி (வயது - 21) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

ஏனையோரின் பெயர் விபரம் கிடைக்கப்பெறவில்லை - என்றுள்ளது.(அ-சி)

# வன்னியிலுள்ள இந்துக்குருமாரை அழைத்து வருமாறு கோரிக்கை

கொழும்பு, பெப். 26

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் சிக்கியுள்ள இந்துகுருமார்களின் குடும்பங்களை பாதுகாப்பாக கொழும்பிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி சர்வதேச இந்து மத பீடம் செஞ்சிலுவை சர்வதேச குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இந்து குருமார்களின் 50 குடும்பங்கள் அப்பகுதியில் சிக்கியுள்ளன என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அப்பகுதியிலிருந்து வர விரும்புகின்றனர் எனவும் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அவர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (அ-சி)

## அவலங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர். இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் வாழும் மக்கள் பதுங்கு குழிகளுக்குள்ளேயே வசிக்கின்றனர்.

அப்பகுதிகளில் உணவு இல்லை என்றே கூறலாம். ஒரு நாளுக்கு மூன்று லொறிகளில் உணவுப்பொருள்கள் அனுப்பப்பட்ட போதிலும் அவை போதுமானவையல்ல. இதுவரை 5 லொறி உணவுப் பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன - என்றார்

## குற்றப்புலனாய்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் நடத்தப்பட்டன என்பது குறித்த தகவல்களை தற்போது வெளியிட முடியாது என்றும், விரைவில் அது குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கபடும் என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். (அ-சி)

## வன்னியில் பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**போதிய பாதுகாப்பின்மை சிகிச்சைகளைப் பாதித்துள்ளது**

மோதல் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் மோதலில் சிக்கியுள்ளவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எமக்கு 45 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன.

சுகதாரத் துறையில் போதிய பணியாள்கள் இன்மை பல மக்களுக்கான சுகாதார பராமரிப்பு பாதிக்கப்படுவதற்குக் காரணமாகியுள்ளன.

மேலும் தொடர்ச்சியாக மக்கள் இடம் பெயர்வதும் போதிய பாதுகாப்பின்மையும் மக்களுக்கான சிகிச்சைகளைப் பாதித்துள்ளன.

கர்ப்பிணித் தாய்மார்கள் உரிய மருத்துவ சேவைகளைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் நோய் எதிர்ப்புத் திறனை உயர் மட்டத்தில் வைத்திருப்பதற்கான முயற்சிகள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் சுகாதார நிலை மேலும் மோசமடையும். மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவலாம்.

அதிகளவானவர்கள் உள ரீதியான பாதிப்புக்கு உட்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (அ-சி)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித தடையுமின்றி மனிதாபிமான உதவிகளை செய்வதற்கு அனுமதியளிக்கப்படவேண்டும் - என்றார். (அ-சி)

நாடாளுமன்ற உறுப்பினர் கன கரத்தினம்.

முல்லைத்தீவில் வாழும் மக்களின் நிலை தொடர்பாக பி.பி.ஸி. செய்தியாளரின் கேள்விக்கு பதில் கூறுகையில்:-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் போன்ற பல பகுதிகளையும் சேர்ந்த சுமார் 4 லட்சத்து 19 ஆயிரம் பேர் முன்னர் வசித்தனர். இப்போது இறந்தவர்கள், வெளியேறியவர்களைத் தவிர்த்து 3லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர் என்றார்.

விடுதலைப் புலிகள் மக்களை வெளியேற விடாமல் தடுக்கின்றனர். வெளியேறுவோரை சுட்டுக் கொல்கின்றனர் எனக் கூறப்படுகிறதே எனக் கேட்ட போது அது தவறான தகவல் எனவும் வெளி யேற முனைந்த மக்கள் இராணுவப் பகுதிக்கு செல்லும் போது போரின் இடை யில் சிக்கி இறந்திருக்கலாம் என்று கூறப்படுவதை 90வீதம் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-06)

## வன்னியிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் என சுமார் பத்துப்பேர் முதல் பன்னிருவர் வரை அங்கத்தவர்களைக் கொண்டதாக ஒவ்வொரு மருத்துவ அணியும் அமையும் எனவும் -

இத்தகைய எத்தனை மருத்துவ அணிகளை சேவைக்கு அழைப்பது என்பது இலங்கைத் தரப்பின் வேண்டுகோளைப் பொறுத்து அமையும் எனவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

பெரும்பாலும் தமிழ் பேசும் தகைமையுடையவர்களே இத்தகைய மருத்துவ அணிகளில் இடம்பெற்றிருப்பர் எனத் தெரிகின்றது.

அவர்கள் முதலில் திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களுக்கு - போரில் சிக்கிக் காயமடைந்த நிலையில் மீட்கப்படும் பொதுமக்கள் வழக்கமாகக் கொண்டுவரப்படும் இடங்களுக்கு - பணிக்கு அனுப்பப்படுவர் என்றும் கூறப்பட்டது.

உரிய மருத்துவ உபகரணங்கள், சாதனங்கள், மருந்துப்பொருள்கள் போன்றவற்றையும் இக்குழுவினர் தம்முடன் எடுத்து வருவர் என்றும் கூறப்பட்டது.

காயமடைந்த நிலையில் மீட்கப்படும் பொதுமக்களின் எண்ணிக்கைக்கு அமைய, இந்திய மருத்துவக் குழுக்களின் எணிக்கையும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த இரு வாரங்களுக்குள் இக்குழுக்களின் பணி இலங்கையில் ஆரம்பித்து விடும் என எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உரிய மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக மருத்துவக் குழுக்களையும் மருந்துகளையும் விரைந்து அனுப்பி உதவுமாறு, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, இந்திய மத்திய அரசை அண்மையில் வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)





CIMA MCS
Supported By UNDP/JRRP
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
Certificate Level 28.02.2009 Sat 8AM
Managerial Level 01.03.2009 Sun 1PM
பதிவுகளை 27.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction, Bus Root-764


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.